# இறந்தவனே வணக்கம்

பட்டுக்கோட்டை பிரபாகர்



## 1



சிலுசிலுவென்று, சிணுங்கல் மழை. நனைதல் சுகம். உணர்ந்தவை மரங்கள், கதிரவன் கறுப்பு மேகங்களுக்குள் பதுங்கல். சோம்பேறித்தனத்தை எல்லோருக்கும் இஞ்செக்ட் செய்யும் மழைக்கால காலை.

ஆனாலும் அந்த பங்களாவில் சுறுசுறுப்பாகக் காத்திருந்தார்கள். சற்றே ஈரமாயிருந்த செய்தித் தாள்களை பங்கு போட்டுக் கொண்டு படித்துக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே போன் மீண்டும் மீண்டும் அடித்துக் கொண்டிருந்தது. யாரோ எடுத்தார்கள். யாரோ பேசினார்கள். யாரோ அவசரமாக ஓடினார்கள்.

தேதி கேட்டு இரண்டு தயாரிப்பாளர்களும், முடிந்த படத்திற்கு டப்பிங் சௌகரியம் விசாரிக்க டைரக்டரும் அவரின் இரண்டு

அசோசியேட்டுகளும், பில்டிங் பிளானில் சொல்லப்பட்ட மாற்றங்களை சரி செய்து கொண்டு வந்து காத்திருக்கும் என்ஜினியரும் அவருடைய உதவியும், அழைக்கப்பட்டதால் வந்திருந்த ஆடிட்டரும் காத்திருந்த போது, முன்னறி விப்பு இல்லாமல் பேட்டிக்காக வந்திருக்கும் தனக்கு நேரம் ஒதுக்கப் படுமா என்று நம்பிக்கை இல்லாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் அந்த நிருபன்.

ஸ்டெட்டிகாமில் ரிசப்ஷனைக் கடந்து மகா ஹாலைத் தாண்டி, ரெட் கார்ப்பெட் போர்த்தின மாடிப்படிகளில் அலுங்காமல் ஏறி, அந்த அறைக்குள் நுழைந்தால்...

தண்ணீர் படுக்கையில் கைகளைப் பரப்பி குப்புறப் படுத்து சுகமாக உறங்கிக் கொண்டிருந்தான் சூர்ய சந்தர். என்னது, யாரா? கோடம்பாக்கமே இவன் விழித்தால் உதயமாகிறது. இவன் உறங்கினால் அஸ்தமன மாகிறது. வரவேற்பறையில் 100-வது நாள், 175-வது நாள், என்று அடுக்கப்பட்டிருக்கும் கேடயங்களைப் பார்த்த பிறகுமா இந்தக் கேள்வி?

சூர்யா சந்தரை வர்ணிக்கலாமா? நல்ல அகலமான... டெலி போன் ஒலித்து அவன் தூக்கத்தையும், நம் வர்ணனையும் கலைத்து விட்டது பாருங்கள்.

"ஹலோ, சூர்யா" என்றான் படுத்தபடியே எழுந்து கழுத்தில் இடுக்கிக் கொண்டு மறுபடி கண்களை மூடிக் கொண்டான்.

"குட் மார்னிங் சார். சிக்ஸ் தர்ட்டிக்கு எழுப்பச் சொன்னீங்க..".

"விஷால், மழை பெய்யுது போலிருக்கே..."



"ஆமாம் சார்.."

"இந்த மழையில பீச்சல எப்படிய்யா ஷூட் பாடறது? கேன்சல் ஆகியிருக்குமே. போன் வந்துச்சா?"

"வந்துச்சு சார். கேன்சல் பண்ணலை. நீலாங்கரை பங்களாவுக்குள்ளே இன்டோர் சீன்ஸ் பிளான் பண்ணிருக்காங்களாம்".

"விட மாட்டாங்களே. நீலாங்கரை பங்களான்னா மாஸ்க் ஷாட்ஸ்தான் இருக்கும் அங்கே அதான் பேலன்ஸ்"

"ஆமாம் அதான் சார்"

"படுத்துவாங்களே விஷால். உடனே உடனே ரெண்டு காஸ்ட்யூமையும் மாத்தி மாத்திப் போடணும். காம்பினேஷனுக்கு மீனா கிடைக்கலைன்னு சொல்லிட்டிருந்தாங்களே.."

"மைசூர்ல ராஜகுமாரி ஷூட்டிங் முடிச்சுட்டு நேத்து நைட் வந்துட்டாங்களாம்.."

"எப்படிப் பார்த்தாலும் அவாய்ட் பண்ண முடியாதுன்றே?"

"ஆமாம் சார்."

"முக்கியமா யாராச்சும் வந்திருக்காங்களா?"

"என்ஜினியரும், ஆடிட்டரும் வந்திருக்காங்க சார்."

"என்ஜினியரை நீலாங்கரை ஷூட்டிங் பங்களாவுக்கு வந்துடச் சொல்லு. மேக்கப் கேப்புல டிஸ்கஸ் பண்ணிடறேன். ஆடிட்டர் என்னோட கார்ல வந்துடட்டும்."

"டைரக்டர் பிரகாஷ் வந்திருக்கார்"

"டப்பிங் மேட்டர்தானே?"

"ஆமாம்"

"இவருக்கு முதல் படமா இருக்கலாம். எனக்கு முதல் படம் இல்லையே. கம்பெனி லேர்ந்து கொடுத்த ரெண்டு செக்கும் பவுன்ஸ் ஆகியிருக்கு. இதோ, அதோன்றாங்க. இந்தாளோட முகத்துக்காக டப்பிங் முடிச்சுக் கொடுத்துட்டா பைசா பேறாது விஷால். இவனை இன்னைக்கு நான் பார்க்கலை விஷால். புரொட்யூசரை விட்டுப் பேசச்சொல்லு. கால்ல விழுந்துடறான். ஒரு மாதிரியாப்டுதுப்பா."

"சரிங்க சார், சொல்லி அனுப்பிச்சுடறேன். அப்புறம் கே.வி.. எஸ்.சும், பாலமுருகன் செட்டியாரும் வந்திருக்காங்க.

"சப்ஜெக்ட் சரியில்லை. தெலுங்குல ஹிட்டாயிருந்தா இவங்களை யாரு கண்ணை மூடிக்கிட்டு பதினைஞ்சு ரூபா கொடுத்து ரைட்ஸ் வாங்கச் சொன்னது, சில சப்ஜெக்ட்ஸ் அங்க எடுபடும். இங்க ஊத்திக்கும். சில சப்ஜெக்ட்ஸ் இங்க சக்கைப் போடு போடும். அங்க காத்து வாங்கும். இது புரியாம நீங்கதான் பண்ணணும்னு கெஞ்சினா எப்படி? சரி, நானே பேசி அனுப்பிசுடறேன்.

"அப்புறம் கௌதம்னு சினிமா தென்றல் பத்திரிகையிலேர்ந்து..."

"இப்ப பேட்டி எல்லாம் எதுவும் வேணாம் விஷால். அனுப்பிச்சுடு"

"தீபாவளி இதழ்ல உங்க ப்ளோ - அப் லைஃப் சைக்குப் போட்ட பத்திரிகை சார். மன்றத்துக்காரங்க நட்சத்திரம் தொங்க விட்டப்போ, அதைத்தான் வெட்டி யூஸ் பண்ணினாங்க. அஞ்சி நிமிஷம்தான் கேக்கறார்."



"அப்படின்னா ஒரு கண்டிஷன் சொல்லிடு."

"என்ன?"

"பிரதீபா உங்களை லவ் பண்றதா பேட்டில சொல்லிருக்காங்களே சார், உண்மையா? - இந்த ஒரு கேள்வி கண்டிப்பா கேக்கக்கூடாது. சொல்லிடு. பிரேக் ஃபாஸ்ட் செட்ல எடுத்துக்கறேன். பேக் பண்ணிக்கோ. இப்போ காபி மட்டும் அனுப்பு."

சூர்யாசந்தர் எழுந்து, அமர்ந்ததும் படுக்கைக்குள் தண்ணீர் அலைந்தது. கைகளை உதறினான். கொட்டாவி விட்டான். தலை மாட்டில் இருந்த கிங்சைஸ் சிகரெட் எடுத்துக் கொளுத்திக் கொண்டான். எழுந்து வந்து தொங்கும் மணிக் கயிற்றை இழுத்து ஸ்க்ரீன் விலக்கி கண்ணாடிக்கு வெளியே தூறலைப் பார்த்தான்.

சிகரெட் முடிந்ததும் டாய்லெட் அறைக்குள் சென்று திரும்பினான். பிளாஸ்க்குடன் காத்திருந்தவன் கப்பில் ஆவி பறக்க ஊற்றி நீட்டினான்.

"என்னடா ராஜு, கவனிக்கவே இல்லை. மீசை. ஒதுக்கியிருக்கே போலிருக்கு. வயசுக்கு வந்துட்டியா?"

"போங்க சார்"

"அதுசரி, செல்வி குளிக்கிறப்ப எட்டிப் பார்த்தியாமே..."

"அய்யய்யோ! அதெல்லாம் இல்லவே இல்லிங்க சார்."

"இந்த வீட்ல எப்ப எது நடந்தாலும் என் காதுக்கு வந்துடும். இந்த மாதிரி அல்பத்தனமா எதுவும் வெச்சுக்காதே. நறுக்கிடுவேன். ரயிலுக்கு டிக்கெட் எடுத்துக் கொடுத்து ஊருக்கு அனுப்பிச்சுடுவேன். என்ன போயிட றியா?"

சடாரென்று அவன் கால்களில் விழுந் தான்.

"இனிமே, அந்த மாதிரி எல்லாம் செய்ய மாட்டேன் சார்."

"நேரா கதவைத் திறந்துகிட்டு உள்ளேப் போயிடறேன்றியா?"

"அய்யோ!"

"எந்திரிடா. இதெல்லாம் இந்த வயசுல சகஜம். இன்னும் கொஞ்சம் வயசாகட்டும். பொண்ணு பார்த்து வைக்கிறேன். என்ன?"

கண்ணீர் வழிந்த அவன் கன்னத்தில் தட்டிவிட்டு, குளியலறைக்குள் சூர்யாசந்தர் சென்றதும், 'ஹப்பா!' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு பெருமூச்சு விட்டான் அவன்.

குளித்துவிட்டு வந்து பாடி ஸ்பிரே போட்டுக் கொண்டு உடைகள் அணிந்தான். கீழே இறங்கி வந்தான்.

ஹாலில் சோபாவில் அமர்ந்து சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு அங்கே இருந்த் அன்றைக்கு வந்த வார இதழ்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் புரட்டினான்.

விஷால் அருகில் டெலிபோனில், "நீங்க அப்புறம் பண்ணுங்க சார். அவர் பிசியா



இருக்கார்" என்றுச் சொல்லிக் கொண்டிருக்க-

"யாரு விஷால்?"

"யாரோ ரசிகரு, பேசணுமாம்."

"கொண்டா, திடீர்னு சில பேருக்கு இன்ப அதிர்ச்சியும் கொடுக்கணும்."

டெலிபோனின் ஹேண்ட் செட்டை விஷாலிடம் வாங்கி "ஹலோ குட் மார்னிங். நான் சூர்யாசந்தர் பேசறேன். நீங்க யார் சார்?" என்றான்.

"நான் உங்களை கொலை செய்யப் போறவன்" என்றது எதிர்முனை.

"வாட் நான்சென்ஸ்?"

"தீர்மானிச்சாச்சுங்க. சொல்லிட்டு செய்ய லாம்னு பட்டுச்சி சொல்லிட்டா உங்க மனசு தயாராகிக்கும் இல்லிங்களா?"

"என்ன பேத்தல் இதெல்லாம்?"

"என்ன சார் திட்டறானா? வெச்சுடுங்க" என்ற விஷாலைக் கையமர்த்தினான் சூர்யா சந்தர்.

"இதோ பாருங்க சூர்யா, இன்னைக்கு உங்க வாழ்க்கைக்கு முற்றும் போடற நாள் சார். படு நிச்சயமா இதுதான் உங்க கடைசி தினம். இதில எந்த மாற்றமும் இல்லை. உங்களுக்கு வாழ்க்கையில கடைசி ஆசைகள் ஏதாச்சும் இருந்தா, அதை இன்னைக்குள்ளே நிறைவேத் திக்க முடியும்னா நிறைவேத்திக்கங்க. வெச்சுட றேன்."

எதிர்முனை வைக்கப்பட்டதும் வாய் விட்டுச் சிரித்தான், "ரசிகர்களோட நேரடி யாகப் பேசி நாளாச்சேன்னு பேச நினைச்சா

என்ன ஒரு கேனத்தனமான கால் பாரு!" என்றான்.

"என்ன சார் சொன்னான்?"

"என்னைக் கொல்லப் போறானாம். இன்னைக்கு என்னோட கடைசி நாளாம். கடைசி ஆசைகள் இருந்தா நிறைவேத்திக்கச் சொல்றான். காலங்கார்த்தாலே என்ன ஒரு நல்ல வார்த்தைகள் பாரு!"

"ஸாரி சார். முதல்லயே கட் பண்ணி யிருப்பேன். தீவிரமான ரசிகன்னு சொன்னான். பேசியே ஆகணும்னு கெஞ்சோ கெஞ்சுன்னு கெஞ்சினான். நீங்க வேற கேட்டதால கொடுத் தேன். எதுக்கும் உங்க ஃபிரண்டு டெபுடி கமிஷனர் சாந்தாராம் சாரைக் கூப்பிட்டு சொல்லிரட்டுமா?"

"எதுக்கு?"

"டேன்ஜரா பேசிருக்கானே..."

"இதை சீரியஸா எடுத்துக்கச் சொல்றியா? போன வாரம் இப்படித்தான் ஒரு போன் கால். பேசினது ஸ்ரீதேவி. மெட்ராஸ்ல ஒரு பூஜைக்காக வந்ததாச் சொல்லிட்டு அடுத்து அவங்க எடுக்கற சொந்தப் படத்தில நான் ஆக்ட் பண்ணணும்னு சொன்னாங்க. அது சம்மந்தமா பேசறதுக்கு வீட்டுக்கு வரச் சொன்னாங்க. நானும் சொன்ன நேரத்துக்குப் போனா 'ஸ்ரீதேவி பம்பாய்ல ஷூட்டிங்ல இருக்காங்க. இங்க வரல்லையே'ன்னு சொன்னாங்க. பாம்பேக்கு கால் போட்டுப் பேசினா 'நான் உங்களோட பேசலையே'ன்னு சொல்றாங்க அவங்க. அப்புறம் மறுநாள் ஒரு போன். பேசினது மறுபடி ஸ்ரீதேவி. 'என்ன சார்,



நேத்து ஏமாந்திங்களா? நான் காலேஜ் ஸ்டூடண்ட். மிமிக்ரில எக்ஸ்பர்ட்'னு சொல்லி சிரிக்கிறா அந்தப் பொண்ணு. அந்த மாதிரிதான் இதுவும். நாளைக்கு இவனே போன் செஞ்சி 'என்ன சார், நேத்து பூரா ரொம்ப பயந்து போய்ட்டிங்களா?'ன்னு கேப்பான்."

"அப்படித்தான் இருக்கும். ஆனாலும் லேசா ஒரு டென்ஷன் வருதே."

"விடு. நினைக்காதே. வேலையைப் பார்க் கலாம். செட்டியாரை முதல்ல வரச்சொல்லு."

அரைமணி நேரம் கழித்து சூர்யாசந்தர் தன் டொயாட்டோ காரில் அமர்ந்தான். அவன் அருகில் ஆடிட்டர் ஏறிக் கொண்டார். முன் சீட்டில் விஷால் ஏறிக் கொண்டதும், கார் புறப்பட இருந்த சமயம்...

"ஒரு நிமிஷம் இரு கந்தசாமி" என்று டிரைவரிடம் சொன்ன விஷால் திரும்பி. "சார், ஏர்போர்ட்டுக்கு அடிக்கடி விமானத்தில பாம் இருக்குன்னு அனாமதேய போன் கால்ஸ் வர்றதுண்டு. தொண்ணித்தி ஒம்போது சதவீதம் அது விளையாட்டுக்காக செய்யப்பட்ட கால்னு சோதனை முடிவுகள்ல தெரியும். ஆனாலும் அந்த ஒரு சதவிகிதத்தை சேர்ந்த கால் எதுன்னு தெரியாததால ஒவ்வொரு காலுக்குமே முழு கவனம் கொடுத்து சீரியஸாத்தானே எடுத்துக் கறாங்க" என்றான்.

"அதுக்கென்ன?"

"அந்த மாதிரி இந்த காலை நாமு அடி யோட அலட்சியப் படுத்தணுமா?"

"விஷால், அனாவசியமா பத்திரிகைகள்ல

பெரிசு பண்ணி எழுதிடுவாங்க. விட்டுடேன். மறந்துடு. ரொம்ப பயப்படாதே நீ!"

"என் திருப்திக்காக சொல்லி வெச்சிடலாமே சார்."

"சரி. டெபுடி கமிஷ்னர்கிட்ட என்ன சொல்லப் போறே?"

"பேசினதை அப்படியே சொல்ல வேண்டியதுதான்."

"செக்யூரிட்டிக்கு போலீசை அனுப்பி வெச்சுடுவார் விஷால். ஒரு சீன் கிரியேட் ஆகி எல்லார்கிட்டயும் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கும்."

"மேட்டர், வெளில தெரியாம என்ன ஏற்பாடுகள் செய்யமுடியும்னு அவரையே கேக்கறேன் சார்."

"விடமாட்டே போலிருக்கே. சரி, போ! போன் பேசிட்டு நீலாங்கரை பங்களாவுக்கு வந்து சேரு. நான் முன்னால போய்கிட்டிருக்கேன்."

விஷால் இறங்கிக் கொண்டதும், கார் புறப்பட்டது.

சூர்யாசந்தர் தன் பக்கம் திரும்பி சிகரெட் பாக்கெட்டை நீட்டி புன்னகை செய்ததும், "எனி பிராப்ளம் சார்?" என்றார் ஆடிட்டர்.

"நத்திங் சீரியஸ். நம்ம மேட்டரைப் பேசலாம்" என்றதும் ஆடிட்டர் தான் கொண்டு வந்திருந்த ஃபைலைத் திறந்து கொண்டார்.

***





2

## பத்து வருடங்களுக்கு முன்பு...

"அத்தை. இதான் எல்லை. நீங்க எனக்கு மாமியாரா இருக்கலாம். அதுக்காக என்னை ஒரு கொத்தடிமை மாதிரி நடத்தறதை இனிமேயும் பொறுத்துக்க முடியாது. எனக்கு மருமகங்கிற மரியாதை வேணாம். ஒரு மனுஷியாக்கூட பார்க்க மாட்டேங்கறிங்களே. எங்கேயோ பொறந்து எங்கேயோ வளர்ந்து அந்த உறவுகளை எல்லாம் விட்டு... அந்த சூழ்நிலைகளை எல்லாம் விட்டு ஒருத்தி உங்க வீட்டுக்கு வர்றாளே, அவ மனசில எவ்வளவு கனவுகள் இருக்கும்! அதைக் கொஞ்சமாச்சும் நினைச்சுப் பார்த்திருப்பிங்களா நீங்க? ச்சே! இந்த பெண்கள் சுதந்திரம்னு மேடை மேடை பேசறாங்களே, அது பெண்களுக்கு ஆண்கள் கிட்டேர்ந்து தேவையில்லை. பெண்களுக்கு பெண்கள் கிட்டேர்ந்தே முதல்ல சுதந்திரம் வேணும். நம்ம முன்னேற்றத்திற்கு முதல் தடைக்கல் நாமேதான். இது வரைக்கும் நாங்க குனிஞ்சி குனிஞ்சி குட்டு வாங்கிட்டிருந்தோம். இனிமே அப்படி நடக்காது. இனி வர்ற மருமகள் கெரசினையும், தீப்பெட்டியையும் கையில எடுத்தால்னா அது தன் மேல ஊத்தி பத்த வெச்சிக்கிறதுக்காக இருக்காது. கொடுமை படுத்தற உங்க மேல ஊத்தி பத்த வெக்கிறதுக்காகத்தான் இருக்கும்."

திலகா உணர்ச்சிப் பூர்வமாக பேசினாள். ஒவ்வொரு வசனத்திற்கும் அந்த அரங்கத்தில் அமர்ந்திருந்த அத்தனை கல்லூரி மாணவி களும் கை தைட்டினார்கள்.

நாடக மேடையில் மாமியார் பாத்திரம் ஏற்று நடித்துக் கொண்டிருந்த மாணவி மேல் ஒரு கசக்கப்பட்ட காகிதப் பந்து வந்து விழுந்ததில் அவள் வசனத்தை மறந்து விட்டு...

"இதோர் பாருடி! இதோ பாருடி... வந்து..." என்று தடுமாற...

திலகா அதற்கு சமாளிப்பாக, "என்ன, பேசின பேச்சுல வார்த்தையே வரல்லையா? என்ன சொல்லப் போறீங்க? உங்க மகன் வந்ததும் சொல்லி என்னை கழுத்தைப் பிடிச்சி வெளில தள்ளச் சொல்றேன்னு சொல்வீங்க. அதானே?" என்றாள்.

"அதேதான். அவன் வரட்டும்" என்று சொல்லிவிட்டு "மாமியார்" லெஃப்ட் சைடு செல்ல... "தாராளமா சொல்லுங்க. நடக்கப் போற கூத்தையும் பார்த்து ரசிங்க." என்று இவள் சொல்லிவிட்டு ரைட் சைடு வந்தாள்.

மேடையில் விளக்குகள் அணைந்து, முன் திரை தொங்கவிடப்பட்டது. காட்சி பின்னணி மாற்றப்பட்டது. மேடையின் பொருள்கள் அவசர அவசரமாக அடுத்த சீனுக்காக அமைக்கப்பட... வாத்தியக் குழு ஃபில்லிங் ட்யூன் வாசிக்க...

திலகா மேடையின் ஓரத்தில் இருந்த மேக்கப் அறைக்கு விரைந்து அவசர அவசரமாக சேலையை உருவிப் போட்டு, ஜாக் கெட்டைக் கழற்றி அடுத்த சீனுக்குண்டான



சேலை, ஜாக்கெட்டை அணிந்து, கண்ணாடி பார்த்துக் கொண்டு வெளியே வந்து மேடை யின் ஓரத்தில் நின்றாள்.

அந்த நாடகத்தை எழுதி இயக்கிய புரொபசர் மாலதி அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "திலகா, பிரமிச்சிப் போய்ட்டேன். தூள் பண்ணிட்டே இந்த சீன்ல, கிளாப்ஸ் பூரா உனக்குத்தான். ஓரத்திலேர்ந்து நான் ஜட்ஜஸ் முகங்களையேத்தான் பார்த்துட்டிருந்தேன். எல்லாம் அசந்து போய் பார்த்துட்டிருந்தாங்க. நிச்சயமா பெஸ்ட் ஆக்ட்ரஸ் அவார்டு உனக் குத்தான்" என்றார்.

"பார்க்கலாம் மேடம். சரிதா டயலாக்கை மறந்துட்டு சொதப்பனதும் ஒரு செகண்ட் எனக்கும் நெர்வஸாய்டுச்சி."

"அதான் அவ பேச வேண்டியதையும் நீயே சொல்லி சமாளிச்சுட்டியே. ஆடியன்சுக்கு சொதப்பலாத் தெரிஞ்சிருக்காது. ரிகர்சலப்ப ஒண்ணுக்கு ரெண்டு ஐஸ்கிரீம் மட்டும் கேட்டு வாங்கி சாப்பிடத் தெரியுது. நாலு வரி டயலாகை மைண்ட்ல வெச்சுக்க முடியலை அவளுக்கு. நாடகம் முடியட்டும், வெச்சுக் கறேன்"

மேடையில் இப்போது திலகா செல்ல வேண்டிய அவசியமில்லாத வேறு ஒரு அலு வலக காட்சி நடந்து கொண்டிருந்ததால் திலகா கை விசிறி எடுத்து தனக்கு விசிறிக் கொண்டாள்.

மேடையின் ஓரத்தில் இருந்த சின்ன இடைவெளி வழியாக அந்த அரங்கத்தில் பத்தாவது வரிசையில் அமர்ந்திருந்த தன் அண்ணனைப் பார்த்துக் கொண்டாள்.

தர்மராஜ் கன்னத்தில் கைதாங்கி சுவாரசியமாக நாடகத்தை கவனித்துக் கொண்டிருந்தான்.

அடுத்த காட்சியிலும் தன் 'மாமியாரை' செமத்தியாக டோஸ்விட்ட இந்தப் புரட்சி மருமகளுக்குகு விடாமல் கைத்தட்டல்கள் கிடைத்தன.

நாடகம் முடிந்ததும் மேடைக்கு வந்து மைக்கைப் பிடித்தார் நடுவர் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கிய முக்கிய புள்ளி.

"மாணவிகளே, ஆசிரியைகளே, மற்றும் இந்த நாடகத்திற்கு வந்திருக்கும் சகோதர சகோதரிகளே... வணக்கம். ஒன்றரை மணி நேரம் நம்மைக் கட்டிப்போட்டு விட்டது இந்த நாடகம். சமீபத்தில் இப்படி ஒரு நிறைவான நாடகத்தை நான் பார்க்கவில்லை. சொல்லப் போனால் மாணவிகளிடம் இவ்வளவு திறமையை நான் எதிர்ப்பார்க்கவே இல்லை. குறிப்பாக இந்த நாடகத்தில் நம் அத்தனை பேரையும் அயர வைத்தவர் மருமகள் பாத்திரமேற்று நடித்த மூன்றாமாண்டு படிக்கும் மாணவி செல்வி திலகா!"

கைத்தட்டல்கள் அடங்க நிறைய விநாடிகளாயின.

"திலகா சிறப்பாக நடித்தார். தவறு, அந்தப் பாத்திரமாகவே மாறிவிட்டார். அழகான முகவெட்டுடன் நல்ல குரல்வளமும் அற்புதமான நடிப்புத் திறமையும் உள்ள திலகாதான் இந்த நாடகத்தில் சிறந்த நடிகை பரிசைத் தட்டிச் செல்கிறார் என்று நான் சொல்ல அவசியமில்லாமலேயே நீங்கள் யூகித்திருப்பீர்கள்."



மீண்டும் கைத்தட்டல்கள்.

"திலகா சினிமாவில் நடிக்க முடிவு செய்தால் நமக்கெல்லாம் பத்மினி போன்ற, சாவித்திரி போன்ற ஓர் அற்புதமான நடிகை கிடைப்பார் என்பது மட்டும் நிச்சயம். பரிசுக் கோப்பையை பெற்றுச் செல்ல செல்வி திலகாவை மேடைக்கு அழைக்கிறேன்"

திலகா. இப்போது சூரிதார் உடை அணிந்து, குதிரை வால் கூந்தலில் கூப்பிய கரங்களுடன், முகம் முழுக்க பூரிப்புடன் மேடைக்கு வர...

அத்தனை பேரும் தாள நயத்தோடு, "அப்! அப்! அப்!" என்று குரல் கொடுத்தபடி கைத் தட்டினார்கள். தர்மராஜும் கண் கலங்க உற்சாகமாகத் கைத்தட்டினான்.

பரிசுக் கோப்பையை வாங்கிக் கொண்ட போது...

"வொண்டர்ஃபுல் பெர்ஃபார்மென்ஸ். யு ஹேவ் எ பிரைட் ஃப்யூச்சர், ஆல் தி பெஸ்ட்மா" என்றார் வி.ஐ.பி.

"தேங்க் யூ சார்" என்று வாங்கி மாணவிகளை நோக்கி உயர்த்திக் காட்டினாள்.

தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி முடிவடைய, எல்லோரும் கலையத் துவங்கினார்கள், திலகாவை பத்து நிமிடம் குலுக்கின கையை விடாமல் பிரின்சிபால் மேடம் பாராட்டினார். பிறகு மற்ற மேடம்ஸ் சக மாணவிகள், அவளை உற்சாகப் பெருக்கில் அப்படியே தலைக்கு மேல் தூக்கி விட்டார்கள்.

சில உரிமையான தோழிகள் அவளை அணைத்து முத்தமிட்டார்கள். மாற்றி மாற்றி

கை குலுக்கியபடி இருந்தாள். 'தேங்க் யூ' சொல்லிச் சொல்லியே வாய் வலித்தது.

கல்லூரி வாசலில் தன் ஸ்கூட்டர் அருகில் காத்திருந்த அண்ணனிடம் அவள் அந்த கோப்பையுடன் வந்து சேர்ந்து, "இந்தாண்ணா, பாரு. ஸாரி. அரை மணி நேரம் வெய்ட் பண்ண வெச்சுட்டேன். மாறி மாறி ஒவ்வொருத்தரா பாராட்டிக்கிட்டே இருந்தாங்க." என்றாள் திலகா.

"அதனால என்ன திலகா?" கப்பை வாங்கிப் பார்த்துவிட்டு அவனும் அவள் கைப்பற்றிக் குலுக்கி, தொண்டையடைக்க, "எவ்வளவு பெருமையா இருந்திச்சு தெரியுமா. அத்தனைபேரும் உன் நடிப்புக்குக் கைத்தட்டறப்பல்லாம் நான்கூட இவ்வளவு அற்புதமா செய்வேன்னு எதிர்பார்க்கலை திலகா. உக்காரு. நேரா ஹோட்டலுக்குப் போறோம். உனக்கு இஷ்டப்பட்ட ஸ்வீட், டிபன் எல்லாம் சாப்பிடறே! ஓக்கே." என்றான் தர்மராஜ்.

ஸ்கூட்டரை அவன் ஸ்டார்ட் செய்ததும் பின்புறம் அமர்ந்து கொண்டாள்.

அன்றிரவு படுக்கையில் மல்லாந்து படுத்து எல்லோரின் பாராட்டுக்களையும் மறுபடி மறுபடி நினைத்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் திலகா.

தலைமை தாங்கி பரிசளித்தவர் சொன்னது நினைவுக்கு வந்தது.

'திலகா சினிமாவில் நடிக்க முடிவு செய்தால். நமக்கெல்லாம் பத்மினி போன்ற, சாவித்திரி போன்ற ஓர் அற்புதமான நடிகை கிடைப்பார் என்பது மட்டும் நிச்சயம்'



திலகாவின் மனதில் அழுத்தமாக அந்த ஆசை வந்து உட்கார்ந்தது.

நான் ஏன் சினிமாவில் நடிக்கக்கூடாது?




"இதோ பாரு ரஞ்சனி! வர்ற இருபத்தி ஏழாம் தேதி நமக்குக் கல்யாணம். எந்த சக்தியாலயும் இதை மாத்த முடியாது என்றான் சூர்யாசந்தர்.

கேமிரா டிராலியில் நகர்ந்து நின்று பிரேம் அவன் முகத்தில் ஜூம் ஆகி நின்றதும், 'கட்' என்றார் டைரக்டர், "லைட்ஸ் ஆஃப்.

"சூர்யா, இப்ப கெட்டப் சேஞ்ச்"

"ஓக்கே சார்" என்று அந்த பங்களாவில் மேக்கப் அறையாக மாற்றியமைக்கப்பட்டிருந்த அறைக்கு வர, கூடவே விஷாலுடன் ஸபாரி சூட் அணிந்த அந்த திடகாத்திரமான நபரும் தொடர்ந்தார்.

குளிரூட்டப் பட்டிருந்த அந்த ஏ.சி. அறையில் அமர்ந்து சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

காஸ்ட்யூம்ஸ் அசிஸ்டெண்ட் அவன் சட்டையைக் கழற்றினான். மேக்கப்மேன் விக்கைக் கழற்றினான். கண்களில் இருந்த காண்டாக்ட் லென்சை எடுத்தான் சூர்யாசந்தர், "எரியுது. பாருங்க இன்ஸ்பெக்டர், நடிக்கிறது எவ்வளவு சிரமம்னு பாருங்க" என்றான்.

ஸஃபாரியில் இருந்த இன்ஸ்பெக்டர், "வாஸ்தவம்தான். நான் இதுவரைக்கும் ஷூட்டிங் பார்த்ததே இல்லை சார். இன்றைக்குத்தான் பார்க்கறேன். ஒவ்வொரு வசனத்தையும் பிட்டு விட்டா எடுக்கறிங்க. ரெண்டு வரி ஷாட்டுக்கு லைட்டிங் பண்றது, ரிகர்சல் பார்க்கறதுன்னு எவ்வளவு நேரமாகுது! நான் கூட நினைப்பேன் எழுபது நாள் ஷூட்டிங் நடந்ததுன்னு படிக்கறப்ப ரெண்டு மணி நேர படத்துக்கு எழுபது நாள் எடுக்கறாங்கன்னு..." என்றார்.

விஷால் இன்ஸ்பெக்டருக்கும், சூர்யா சந்தருக்கும் ஐஸ் போட்டு இளநீர்கொண்டு வரச் சொல்லியனுப்பினான்.

"என்னோட போன்ல, டேப் பொருத்தப் போறிங்களா? அதுக்கெல்லாம் எதுவும் அவசியமில்லை சார். மணி நாலரை ஆகுது. நீங்களும் என்னோட ஃபிரெண்டுங்கற போர்வையில காலையிலேர்ந்து என் கூடவே. இருக்கீங்க. அசம்பாவிதமா எதுவும் நடக்கறதுக்குண்டான சான்ஸ் எதுவும் தெரியலை. நீங்க புறப்படறதுன்னா புறப்படலாம் சார். சாந்தாராம் சாருக்கு என் தேங்க்சை சொல்லுங்க" என்றான் சூர்யாசந்தர்.

"நோ, நோ! நான் இப்போப் போறதா இல்லை."

"ஏன்?"

"டி.சி.சொல்லியனுப்பியிருக்கார். இன்னைக்குப் பூரா உங்களோட அத்தனை புரோக்ராமலயும் நிழல் மாதிரி கூடவே இருந்து பாதுகாப்பு கொடுத்துட்டு நைட்டு நீங்க



வீட்டுக்குப் போய்ப்படுத்ததுக்கப்புறம் தான் திரும்பணும்னு ஸ்டிரிக்ட்டா சொல்லிருக்கார். இப்படிப் பாதியிலல போறது உங்களுக்கு நல்லதில்லை. அது விளையாட்டுக்காக செய்யப்பட்ட காலாவே இருக்கட்டும். நைட் நீங்க பெட்டுக்குப் போற வரைக்கும் நான் இருந்துட்டுதான் போவேன்."

"ஒக்கே. ஒக்கே. கொஞ்சம் வெளில இருங்க. காஸ்ட்யூம் மாத்தணும்"

"சரி" என்றார் இன்ஸ்பெக்டர் சிவராமன்.

அவர் வெளியே சென்றதும், நெற்றியைப் பிடித்துக் கொண்டான்.

"என்ன சார், தலைவலியா?" என்றான் விஷால்.

"ஆமாம், எல்லாம் உன்னாலதான், பாரு, இப்ப அந்தாளு நைட் நான் தூங்கப் போனதுக்கப்புறம்தான் போவாராம். உன்னை உதைக்கணும்."

"உங்க பாதுகாப்புக்காகத்தானே சொல்றார்?"

"என்ன விஷால், என் அவஸ்தை புரியாமப் பேசறே! ஈவினிங் புரோக்ராம் என்ன?"

"சிக்ஸ் டு எய்ட் டப்பிங் சார்"

"அதுக்கப்புறம்?"

"அப்புறம் வீடுதான் சார்."

"இல்லைய்யா, ஒரு பர்சனல் புரோக்ராம் இருக்கு"

"எதுவா இருந்தாலும் கேன்சல் பண்ணிடுங்க சார்"

"உனக்கு எல்லாத்தையும் உடைச்சு சொல்லணும். பிரதீபா வீட்ல ஒரு பார்ட்டி விஷால். நாளைக்கு ஷூட்டிங்குக்காக ஸ்விட்சர்லேண்ட் போறா. திரும்ப இருபது நாளாகும்."

"உங்க இஷ்டம் சார். என்னைக் கேட்டா எல்லாத்தையும் கேன்சல் பண்ணிட்டு இப்பவே வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுங்கன்னு சொல்வேன். ஆனா டப்பிங் அவாய்ட் பண்ண முடியாது. அதை மட்டும் முடிச்சிட்டு வீட்டுக் குப் போயிடறது நல்லது சார். உயிருக்கும் நல்லது. உடம்புக்கும் நல்லது"

"இவன் ஒருத்தன்! எனக்கு நீதான்யா வில்லன். அந்த போனை எடு. நம்பர் போடு. எங்கே இருக்கான்னு பாரு. விழுந்து குதறப் போறா. சிரிக்காதய்யா! எரியுது எனக்கு, ஒண்ணுமில்லாததை பெரிசு பண்ணி என் ப்ரோக்ராமை சொதப்பிட்டியே..."

விஷால் புன்னகைத்தபடி ரிசீவர் எடுத்து இரண்டு மூன்று இடங்களுக்குப் பேசி, "இந்தாங்க, ஏ.ஆர்.எஸ். கார்டன்லேர்ந்து பேசறாங்க" என்று நீட்டினான்.

அவன் ரிசீவரை வாங்கிக் கொண்டதும் விஷால் அறைக் கதவை சத்தமில்லாமல் சார்த்திவிட்டு வெளியே போனான்.

"பிரதீபா, நான்தான்"

"சொல்லுங்க"

"வந்து... சொன்னா கோபப்படக் கூடாது"

"என்ன?"

"கொஞ்சம் ஷூட்டிங் இங்கே இருக்குது.



நைட் வரைக்கும் போகுது. காம்பினேஷன் ஆர்ட்டிஸ்ட்ஸ் எல்லாம் நாளைக்கு பொள் ளாச்சிக்குப் புறப்படறதால கம்பைண்ட் ஷாட்ஸ் எல்லாம் முடிச்சுக் கொடுத்தாக வேண்டிய சூழ்நிலை."

"ஸோ, நீங்க வரலை! அதானே?"

"வரணும்னுதான் இருந்தேன் பிரதீப்."

"ஒண்ணும் தேவையில்லை. நாளைக்கு அப்ராட் புறப்படறேன்னு ஞாபகம் இருக் குல்லே?"

"நாளைக்கு ஏர்போர்ட்டுக்கு கொண்டு வர்றதுக்கு பொக்கே கூட ஆர்டர்கொடுத்து வெச்சிருக்கேன்மா, மறந்துடுவனா?"

"ஒண்ணும் அவசியமில்லை. நீங்களும் வரத் தேவையில்லை. உங்க பொக்கேயும் வேண்டியதில்லை."

"பார்த்தியா, நிலைமையைப் புரிஞ்சுக்காம கோபப்பட றியே."

"நான் யார் உங்க மேல கோபப்பட? எனக்கென்ன உரிமை இருக்கு!"

"ஏய்... ப்ளீஸ்... சொன்னாக் கேளு."

"ஐ ம் நாட் ரெடி டு லிசன் எனி மோர் எக்ஸ்யூஸஸ்."

லொடக் என்று எதிர்முனை வைக்கப் பட்டது. நீண்ட பெரு மூச்சை வெளியேற்றி போனை வைத்தான் சூர்யாசந்தர்.

அடுத்த கெட்டப்புக்கு மாறின அவன் மேக்கப் மேன், டச்சப் பாய் என்று எல்லோரிடமும் எரிந்து விழுந்தான்.

ஃபிலிம் ரன் அவுட் ஆகி மற்றொரு டேக்

கேட்டபோது, "என்னய்யா கேமிரா அசிஸ்டெண்ட் நீ? சீன் லெங்த் என்னன்னு புரியாது? மேகசின்ல இருக்கிற ஃபில்ம் அந்த லெங்த் வருமான்னு பார்த்து வெச்சுக்க மாட்டே?" என்றுக் கத்த... யூனிட் முழுக்க முகத்தை சீரியஸாக்கிக் கொண்டது.

ஷூட்டிங் முடிந்து காரில் இன்ஸ்பெக்டரோடும், விஷாலோடும் டப்பிங் தியேட்டருக்குப் பயணம் செய்தபோது...

"சார் திடீர்னு மூட் அவுட் ஆகிட்டிங்க போலிருக்கு" என்றார் இன்ஸ்பெக்டர்.

விஷால் கர்சிப்பால் தன் வாயைப் பொத்திக் கொண்டான்.

"சிரிக்காதே நீ! அது வேற ஒருடென்ஷன் சார். உங்களுக்குப் புரியாது. எல்லாம் அந்த விஷால் செஞ்ச வேலை. நாளைக்குக் காலையில கணக்கு பார்த்துசெட்டில் செஞ்சி வீட்டுக்கு அனுப்பி னாத்தான் எனக்கு நிம்மதி!"

"அய்யோ! அப்படி எல்லாம் செஞ்சிடாதீங்க, சின்சியரான பையனாத் தெரியுது" என்றார் இன்ஸ்பெக்டர் சிவராமன்.

"நீங்க கவலைப்படாதிங்க சார். என்னை டிஸ்மிஸ் பண்றது இது நாற்பத்தி ஏழாவது தடவை" என்றான் விஷால்.

டப்பிங் தியேட்டரில் வசனம் பேசும்போது அந்தப் படத்தின் அசோசியேட் டைரக்டரிடமும், சவுண்ட் என்ஜினியரிடமும் அந்த எரிச்சல் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஏழு மணிக்கு ஒரு பிரேக் விட்டபோது டப்பிங் தியேட்டரின் டாய்லெட் அறைகள் இருந்த பகுதிக்கு சூர்யாசந்தர் நடக்க... கூடவே



வந்தார் இன்ஸ்பெக்டர்.

திரும்பிப் பார்த்து முறைத்தான். "ஒன்னுக்கு போகப் போறேன் சார். அங்கயும் கூட வருவிங்களா?" என்று அவர் மேலும் பாய்ந்தான்.

"நோ! நோ! நான் வெளியிலயே வெய்ட் பண்றேன்" என்றார் இன்ஸ்பெக்டர் படு சின்சியராக.

சூர்யா சந்தர் உள்ளே சென்ற சில நிமிடங்களில் கதவு திறந்து பாத்ரும் கிளீன் செய்யும் கிழவன் ஒருவன் கையில் சாயம் போன பக்கெட், விளக்குமாறு, பினாயில் பாட்டில் சகிதம் தலையில் முண்டாசு கட்டி வெளியேறி சென்றான்.

ஐந்து நிமிடங்களானதும் இன்ஸ்பெக்டர் லேசாக கவலைப் பட்டார். யூரின் போய்த் திரும்ப இரண்டு நிமிடங்கள் போதுமே.

மேலும் இரண்டு நிமிடங்கள் காத்திருந்து பார்த்துவிட்டு, கதவைத் தள்ளி உள்ளே சென்றார் சிவராமன்.

யூரின் பேசின்கள் எட்டு வரிசையாக சுவரோமாகச் பொருத்தப்பட்டிருக்க... எல்லாம் காலியாக இருந்தன.

பிறகுதான் தரையில் கால் பரப்பிக் கிடந்தவனைப் பார்த்து அதிர்ந்தார். சூர்யா சந்தர்! நாக்கு லேசாக வெளியே எட்டிப் பார்த்திருக்க... கழுத்தில் ஒரு மெல்லிய கம்பி சுற்றப் பட்டிருந்தது.

தி கிரேட் ஸ்டார் சூர்யாசந்தர் அந்த டாய்லெட் பகுதியில் சர்வ நிச்சயமாக செத்துப் போயிருந்தான்.

ப்ரொஜெக்டரில் மாட்டின ஃபிலிம்ஸ் அடுத்த சீன் அவனுடைய குரலுக்காகக் காத்திருந்தது.

# 4

## பத்து வருடங்களுக்கு முன்பு...

"என்ன திலகா? யோசிச்சுப் பார்த்துதான் பேசறியா நீ?" என்றான் தர்மராஜ்.

"ஆமாண்ணா. நல்லா யோசிச்சுட்டேன். முதல்ல என்னோட லட்சியம் ஒரு காலேஜ் புரொபசராகறதா இருந்திச்சு. இப்போ மாறிடுச்சி. என்கிட்ட அழகு இருக்கு. திறமையும் இருக்கு. இது ரெண்டும் தேவைப்படற சினிமால நான் ஏன் முன்னேறக் கூடாது? நடிகையாகறதுன்னு தீர்மானிச்சுட்டேண்ணா."

"உளறாதே திலகா. உன்னை மிகையாப் பாராட்டணும்னு பல பேரு நீ நடிகையாகலாம்னு சொன்னதை வெச்சுக்கிட்டுப் பேசாதே. சினிமா உலகத்தில் அழகும், திறமையும் மட்டும் பத்தாது. நமக்கு அதெல்லாம் ஒத்து வராது திலகா."

"நீ எதை மனசில வெச்சுக்கிட்டு இப்படிச் சொல்றேன்னு எனக்குப் புரியுதுண்ணா. சினிமாங்கிறது மத்த தொழில் மாதிரி ஒரு தொழில். எல்லா இடத்திலேயும், எல்லாத் துறையிலயும் நல்லவங்களும் இருக்காங்க. மோசமானவங்களும் இருக்காங்க. அதே மாதிரி அங்கேயும் இருக்காங்க. இன்னைக்கு சினிமா



ஸ்டாருக்கு சமுதாயத்தில உள்ள மதிப்பும் மரியாதையும் தனி. அடுத்தடுத்து தமிழ்நாடு முதல்வர்கள் சினிமாலேர்ந்துதான் வந்திருக்காங்க. அது கொடுக்கற புகழும், பணமும் அதிகம். தகுதி உள்ள என்னை மாதிரி நபர்கள் ஒதுங்கிப் போய்ட்டா நல்ல ஆர்ட்டிஸ்ட்ஸ் எப்படி கிடைப்பாங்க? நான் கிளமார் டான்ஸ் ஆடப் போறேன்னு சொன்னா நீ கவலைப் படலாம். சாவித்திரி மாதிரி, ரேவதி மாதிரி டீசண்ட்டான கேரக்டர் ரோல்ஸ் மட்டும் செய்யணும்னு ஆசைப்படறேன்."

"திலகா, உனக்கு இப்போ மனசு முழுக்க சினிமா ஆர்வம் ஒரு வெறியா நிரம்பியிருக்கு. இப்போ நான் என்ன அட்வைஸ் செஞ்சாலும் ஏத்துக்கற நிலைமையில இல்லை. உன் படிப்பு முடிய இன்னும் மூணு மாசம் இருக்கு. இப்போ உன் கவனம் முழுக்க படிப்புல இருக்கட்டும். டிகிரியை நல்ல மார்க்கோட பாஸ் பண்ணு. அதுக்கப்புறம் நிதானமா டிஸ்கஸ் பண்ணி முடிவெடுக்கலாம். எந்த அவசரமும் வேணாம்" என்றான் தர்மராஜ்.

"சரிண்ணா" என்று தன் தலையை ஆட்டினாள் திலகா.

ஆனால்...

லைப்ரரியில் இருந்த அவளிடம் வந்தான் கல்லூரி பியூன்.

"திலகா, உன்னை பார்க்க ஒருத்தர் வந்திருக்கார். விசிட்டர்ஸ் ரூம்ல உட்காந்திருக்கார்"

"யாரு?"

"இந்த கார்டு கொடுத்தார்"

அந்த விசிட்டிங் கார்டில் 'கஜபதி ஃபிலிம்ஸ் சர்க்யூட்' என்று விலாசம் நேர்த்தியாக பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது.

விசிட்டிங் ரூமிற்கு வந்தாள், கதர் வேட்டி, சட்டையணிந்து வெற்றிலை மென்று கொண்டிருந்த நடுத்தர வயது மனிதர் கை கூப்பினார். புன்னகைத்தார்.

"வாம்மா... உக்காரு. போட்டோல விட நேர்ல இன்னும் லட்சுமிகரமா இருக்கே. என்பேரு அய்யாத்துரை. நீ கேள்விப்பட்டிருக்க முடியாது. சினிமால பி.ஆர்.ஓ.வா இருக்கேன். பியூன் கார்டு கொடுத்தானா? கஜபதி ஃபிலிம்ஸ் சர்க்யூட்ல இப்ப முதல் தடவையா தமிழ் படம் எடுக்கறாங்க. இதுவரைக்கும் நாலு மலையாளப் படம் எடுத்திருக்காங்க. நாலும் ஹிட். ரெண்டுல மம்முட்டி ரெண்டுல மோகன்லால். ஆல் ஹண்ட்ரட் டேஸ். தொட்டது துலங்கற கம்பெனி. ரெண்டு பேரு பார்ட்னர்ஸ், துடியான பசங்க. ரெண்டு பேருக்கும் பரணி நட்சத்திரம். அதான் அமோகமா இருக்காங்க. நான் இப்போ பனிரெண்டு படங்களுக்கு வேலை பார்க்கறேன். ஆனாலும் இவங்ககிட்ட வாஞ்சை அதிகம். நீ என்னம்மா நட்சத்திரம்?"

"அஸ்வினி"

"அதையேக்கூட பேரா வெச்சுக்கலாம். நான் ஒருத்தன் வந்த விபரத்தைப் பேசாம... சொன்னனே, புதுப்படம்னு... அதுக்கு ஹீரோயின் புதுமுகம் பார்க்கறோம். ஹீரோயின் சப்ஜெக்ட் பவர்ஃபுல் கேரக்டர். பேப்பர்ல உன் போட்டோ பார்த்த புரொடியூசர்ஸ் 'போய் பேசி இண்ட்ரெஸ்ட் இருக்கான்னு தெரிஞ்சிட்டு வாங்கண்ணே'ன்னாங்க, வந்திட்டேன். என்னம்மா சொல்றே? உனக்கு சினிமால நடிக்கிற இண்ட்ரெஸ்ட் இருக்கா? அஃப்கோர்ஸ் முதல் படத்திலேயே கமலஹாசன் ஜோடியா பாலுமகேந்திரா டைரக்ஷன்ல நடிக்கிறதுன்னா யாருக்கும் கசக்காது. இருந்தாலும் உனக்கு என்ன ஐடியான்னு தெரியணுமில்ல?"



பிரமிப்பில் மிதந்தாள் திலகா.

பாலுமகேந்திரா டைரக்ஷனிலா? மைகாட்! ஷோபா, அர்ச்சனா என்று அற்புதமான நடிகைகளை உருவாக்கின கலைதாகமுள்ள அந்த ஒப்பற்ற இயக்குநரின் இயக்கத்தில் அறிமுகமா?

கமலஹாசனுக்கு ஜோடியாகவா? எவ்வளவு சொல்லித்தருவார்? எவ்வளவு பிரபலமாகப் பேசப்படுவேன்?

மலையாளத்தில் வெற்றிக் கொடி நாட்டிய படக்கம்பெனி முதல் முறையாக தமிழில் இறங்குவதால் வெற்றிப் படமாக்கத் தீவிரமாக உழைப்பார்கள்.

முதல் சந்தர்ப்பமே இப்படி அற்புதமாக யாருக்காவது கிடைக்குமா?

"என்னம்மா எதுவும் பேசலை?"

"சார், எனக்கு சினிமால நடிக்க ஆர்வம் உண்டு. ஆனா இன்னும் மூணு மாசத்ில என் படிப்பு முடியுது. அதுக்கப்புறம் தான் முயற்சில இறங்கணும்னு நினைச்சிட்டிருக்கேன்."

"நல்ல பொண்ணும்மா நீ. நாளைக்கே ஷூட்டிங் ஆரம்பிக்கப் போறதா யார் சொன்னாங்க? இப்பதான் டிஸ்கஷன் நடந்துட்டிருக்கு. அடுத்த மாசம் பூஜை போடறாங்க.

கமல் சார் அதுக்கடுத்த மாசம்தான் டேட்ஸ் தர்றதா இருக்கார். உன்னோட படிப்புக்கு எந்த பிராப்ளமும் வராது. ஆனா பூஜைக்கு முன்னால நாங்க ஆர்ட் டிஸ்ட்சை கமிட் பண்ணியாகணுமில்ல? நான் என்ன அட்வைஸ் சொல்றேன்னா, இந்த நல்ல சான்சை விட்டுடாதே. முதல்ல புரொட் யூசரைப் பார்த்துடு. அடுத்து டைரக்டரும் ஓகே பண்ணிட்டாருன்னா அக்ரிமெண்ட் சைன் பண்ணிடு நீ பாட்டுக்குப் படிச்சிட்டிரு. என் படிப்பு முடிஞ்சதும்தான் ஷூட்டிங் வைக்கணும்னு அக்ரிமெண்ட்லயே எழுதிட்டாப் போச்சு. என்ன நான் சொல்றது?"

எழுந்து கொண்டார் அய்யாத்துரை.

"யோசிக்கிறேன் சார்?"

"யோசி. கார்டு பத்திரமா வெச்சுக்கோ. நாளைக்கு ஞாயித்துக் கிழமைதானே? காலேஜ் இருக்கா என்ன?"

"இல்லை சார்"

"நாளைக்கு அமாவாசை வேற. நிறைஞ்ச நாள், காலைல பத்து மணிக்கு ஆபீஸ் வந்து புரொடியூசரைப் பார்த்துடேன். அவங்களுக்கும் உன்னைப் பிடிக்க வேணாமா? தினம் ஆபீசுக்கு நாற்பது பொண்ணுங்க சீவி சிங்காரிச்சுக்கிட்டு வருதுங்க. எதுவும் சரியில்லை. உன்னை நிச்சயம் பிடிக்கும். பிளெஸண்ட் ஃபேஸ் உனக்கு. இளமை இருக்கு. நிறமா வேற இருக்கே. நாளைக்கு நீ வர்றப்ப என்ன டிரெஸ் போட்டுட்டு வரப்போறே?"

"சூரிதார்தான்"

"அங்கதான் நீ தப்பு பண்றே, புடவை கட்டிட்டு வா. தலைக்கு ஷாம்பூ போட்டுக் குளிச்சி லூஸா ஹேர்ஸ்டைல் பண்ணி பளிச்சுன்னு நல்ல கலர்ல ஸாரியை நேர்த்தியா கட்டிட்டுவா. ஆட்டோவா. ஆட்டோ சார்ஜ் கம்பெனில கொடுத்துடச் சொல்றேன். அப்ப காலைல பத்து மணிக்கு பாப்பா வருதுன்னு அங்க சொல்லிரட்டுமா?" என்றார்.



திலகா தன்னையறியாமல் தலையாட்டி வைத்தாள்.

அவர் போன பிறகுதான் அவருடைய சரளமான பேச்சின் நடுவில் தன்னை யோசிக்கவே விடாமல் தன் சம்மதத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டதை உணர்ந்தாள்.

அதனால் என்ன? என் நன்மைக்குத்தானே சொல்கிறார்? இப்படி ஒரு ஆரம்பம் யாருக்கு அமையும்?

அண்ணனிடம் சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டான். வாதம் செய்வான். காலேஜில் ஸ்பெஷல் கிளாஸ் என்றுச் சொல்லி விட்டுப் போக வேண்டும்.

என்ன சேலை கட்டலாம்?

## 5

**பத்திரிகை அனைத்திலும்**
**சூர்யாசந்தர்தான் தலைப்புச் செய்தி!**

'பிரபல நடிகர் சூர்யாசந்தர் படுகொலை!'

மர்ம மனிதன் யார்? இன்ஸ்பெக்டர் தற்காலிக வேலை நீக்கம்!

நேற்றிரவு எட்டு மணிக்கு சென்னையில் ஒரு டப்பிங் தியேட்டரில் பிரபல நடிகர் சூர்யாசந்தர் அடையாளம் தெரியாத மர்ம மனிதனால் கொலை செய்யப்பட்டார். இதன் விபரங்களாவன.

சூர்யாசந்தருக்கு நேற்று அதிகாலை ஒரு மர்ம டெலிபோன் அழைப்பு வந்தது. பேசிய நபர், தான் அவரைக் கொல்லப் போவதாகவும், இதுதான் அவரின் இறுத நாள் என்றும், கடைசி ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் படியும் கூறியிருக்கிறான்.

இந்த போனை ஒரு விளையாட்டு என்று நினைத்து அலட்சியப் படுத்த தீர்மானித்தார் சூர்யாசந்தர். ஆனால் அவரின் உதவியாளர் விஷாலுக்குப் பதட்டமாக இருக்கவே சூர்யாசந்தரின் நண்பரும், டெபுடி கமிஷனருமான சாந்தாராமுக்கு போனில் தகவல் தெரிவித்தார். டெபுடி கமிஷனர் சாந்தாராம் இதை விளையாட்டாகக் கருதவில்லை. சூர்யாசந்தரின் டெலிபோன்களுக்கு வரும் கால்களை கண்காணிக்க எக்ஸ்சேஞ்சில் ஏற்பாடு செய்துவிட்டு பாதுகாப்புக்காக இன்ஸ்பெக்டர் சிவராமனை மஃப்டி உடையில் அனுப்பி வைத்தார்.

சூர்யாசந்தர் காலையில் நீலாங்கரையில் உள்ள ஒரு பங்களாவில் நடந்தது படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அங்கே வந்து சேர்ந்த இன்ஸ்பெக்டர் சிவராமன் அதன் பிறகு சூர்யாசந்தரின் அருகிலேயே கண்காணிப்புடன் இருந்தார். அவரைத் தன் நண்பரென்று அனைவரிடமும் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார் சூர்யா சந்தர்.



மாலை படப்பிடிப்பு முடியும்வரை எந்த விதமான அசம்பாவிதமான சம்பவமும் அங்கு நிகழவில்லை. அதன்பிறகு சூர்யாசந்தர் ஒரு படத்திற்கு பின்னணி குரல் கொடுப்பதற்காக ஜே.ஜே.டப்பிங் தியேட்டருக்கு வந்தார். அவரோடு இன்ஸ்பெக்டர் சிவராமனும், உதவியாளர் விஷாலும் வந்தார்கள்.

ஏழு மணிக்கு டப்பிங்கில் ஒரு சின்ன இடைவேளை விடப்பட்ட பொழுது சூர்யாசந்தர் கழிப்பறைக்குள் நடந்தபோதும், இன்ஸ்பெக்டர் கூடவே வந்தார்.

இன்ஸ்பெக்டர் வெளியே காத்திருக்க, சூர்யாசந்தர் உள்ளே சென்றார். பல நிமிடங்களாகியும் அவர் திரும்பி வராததால் சந்தேகம் கொண்ட இன்ஸ்பெக்டர் கதவைத் திறந்து உள்ளே சென்றுப் பார்த்து அதிர்ந்து போனார்.

பல கழிப்பறைகள் நிறைந்த அந்தப் பகுதியின் நடைபாதையில் பிணமாகக் கிடந்தார் சூர்யாசந்தர். அவர் கழுத்தில் ஒரு மெல்லிய கம்பி சுற்றப்பட்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் வெளியே காத்திருந்த போது கழிப்பறையை சுத்தம் செய்கிற, தலையில் முண்டாசு கட்டிய கிழவன் ஒருவன் அதற்கான உபகரணங்களுடன் வெளியேறிச் சென்றதை நினைவு கூர்ந்த இன்ஸ்பெக்டர் சூர்யாசந்தரை கொலை செய்தது அந்த நபராகத்தான் இருக்கும் என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்தார்.

அதன் பேரில் அந்தக் கிழவனைத் தேடும் முயற்சிகளில் ஒரு படை இறங்கியது. டப்பிங் தியேட்டரின் நிர்வாகத்தை விசாரித்த போது

'அப்படி கிழவன் யாரும் அங்கே வேலையில் அமர்த்தப்படவில்லை' என்று சொன்னார்கள்.

ஆகவே கழிப்பறை சுத்தம் செய்கிற கிழவனைப் போல மாறு வேடம் புனைந்து கழிப்பறைக்குள் கொலைகாரன் காத்திருந்து சூர்யாசந்தரை கொலை செய்து விட்டுப் போயிருக்கிறான் என்பது தெரிகிறது. காலையில் போனில் பேசியதும் அதே நபராகத் தான் இருக்க வேண்டும் என்று போலீசார் கருதுகிறார்கள்.

அந்த சாமர்த்தியமான மர்ம கொலை காரனை கண்டுபிடிக்கும் பொறுப்பை டெபுடி கமிஷனர் சாந்தாராம் ஏற்றுள்ளார். அவர் தலைமையில் கிரைம் பிரான்ச் ஸ்பெஷல் இன்ஸ்பெக்டர் திரூட்டன் தீவிரமான விசாரணைகளில் இறங்கியுள்ளார்.

தனது பாதுகாப்பு கடமையிலிருந்து தவறியதற்காக இன்ஸ்பெக்டர் சிவராமன் தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டிருக் கிறார்.

பிரேதப் பரிசோதனை முடிந்த பிறகு சூர்யாசந்தரின் உடல் இன்று காலை பத்து மணிக்கு அவர் வாழ்ந்த இல்லத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மதியம் மூன்று மணிக்கு அவரின் இறுதி ஊர்வலம் நடைபெற உள்ளது. இதில் சினிமாத் துறை யைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்களும் கலந்து கொள்கிறார்கள்.

சூர்யாசந்தரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதமாக இன்று திரைப்பட உலகின் அத்தனைப் பிரிவுகளும் விடுமுறை



அறிவிக்கப்பட்டுள்ளது.

சூர்யாசந்தரின் முடிவைக் குறித்து திரையுலகினர் தெரிவித்துள்ள இரங்கல் செய்திகளாவன..




## பத்து வருடங்களுக்கு முன்பு

தன்னை அக்கறை எடுத்துக் கொண்டு அலங்கரித்துக் கொண்டாள் திலகா, லெமன் யெல்லோ பிளைன் ஷிபான் சேலையும், கறுப்பு ஜாக்கெட்டும் அணிந்தாள். லூசான கூந்தலில் மஞ்சள் பவ் வைத்துக் கொண்டாள். மஞ்சள் வளையல்கள், காது தொங்கல்கள், லேசாக லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டாள், கறுப்பு வட்ட ஸ்டிக்கர் பொட்டு.

"அண்ணா, காலேஜிக்குப் போய்ட்டு வர்றேன்" என்றாள் நியூஸ் பேப்பர் படித்துக் கொண்டிருந்த அண்ணனிடம்.

"காலேஜிக்கா? இன்னைக்கு ஸண்டே யாச்சே?"

"ஸ்பெஷல் கிளாஸ் இருக்குண்ணா!"

அவளை நிதான விநாடிகளில் பார்த்து, "வழக்கமா சூரிதார்தானே போட்டுட்டுப் போவே. இன்னைக்கு என்ன ஸாரி?" என்றான்.

"பஸ்சுல போறப்ப ஸாரி கட்டினா தொந்தரவு அதிகம்னு தான் சூரிதார் போடு வேன். இன்னைக்கு ஸண்டேங்கறதால பஸ்சுல

அவ்வளவு கூட்டம் இருக்காது. ரெண்டாவது இன்னைக்கு எல்லாரும் ஸாரில வரலாம்னு நாங்க பேசிகிட்டோம்."

"சரிம்மா, போய்ட்டு வா. ஒரு நிமிஷம்"

நகர்ந்தவள் நின்று, "என்னண்ணா?"

"ஸ்பெஷல் கிளாசுக்கு ஒரு நோட்டுக் கூட எடுத்துட்டுப் போக வேண்டியதில்லையா?"

"ச்சே! சுத்தமா மறந்துட்டேன். தேங்ஸ்ண்ணா."

அறைக்குள் சென்று நோட்புக்குடன் வந்தாள்.

"போய்ட்டு வர்றேண்ணா."

அவள் கண்களைப் பார்த்தபடி தலையசைத்தான்.

கைப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு விரைந்தாள். அவள் தெருமுனையைக் கடந்ததும் தர்மராஜ் எழுந்து அவசரமாக சட்டையணிந்தான். வீட்டைப் பூட்டிக் கொண்டு வேகமாக நடந்தான்.

அவன் தெருமுனையில் திரும்பியபோது, தூரத்தில் தன் தங்கை திலகா ஒரு ஆட்டோவில் ஏறிச் செல்வதைப் பார்த்தான்.

சில விநாடிகள் அசைவில்லாமல் நின்றவன், தளர்ந்த நடையில் தன் வீட்டுக்குள் திரும்பி சிந்தனையோடு நாற்காலியில் அமர்ந்தான்.

***

அந்த சினிமா கம்பெனியின் அலுவலகம் நான்கு மாடிக் கட்டிடத்தில் மூன்றாவது



மாடியில் இருந்தது. படிகளில் ஏறினால் வியர்க்கும் என்றுக் காத்திருந்து லிஃப்டில் மேலே வந்தாள் திலகா.

மூன்றாவது மாடியில் முப்பது அலுவலகங்கள் இருந்தன. அதில் விசாரித்து கஜபதி ஃபிலிம்ஸ் சர்க்யூட் வந்தாள்.

மாடர்னாக இருந்தது. ரிசப்ஷனில் ஏழெட்டு பெண்கள் அமர்ந்திருந்தார்கள். சிலர் தங்கள் அம்மாக்களுடன். உள்ளறையில் டெலிபோன் ஒலித்தது. போடப்பட்டிருந்த பாலிமர் நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தாள். இவள் ஒருத்திதான் புடவையில் இருந்தாள். மற்றவர்கள் ஜீன்ஸ், மினி ஸ்கர்ட், மிடி என்று நாகரீக உடைகளில் இருந்தார்கள்.

யாரை விசாரிப்பதென்று தெரியவில்லை. தன்னைக் கல்லூரியில் வந்து சந்தித்துப் பேசின அய்யாத்துரை கண்களில் தென்படுகிறாரா என்றுப் பார்த்தாள்.

இரண்டு கன்னங்களிலும் மொத்தமாக எழுபது எண்பது பருக்களுடன் இருந்த இவளுக்குப் பக்கத்து இருக்கைக்காரி, "டெஸ்ட்டுக்கு வந்திருக்கிங்களா?" என்றாள்.

"என்ன டெஸ்ட்?"

அவள் சிரித்து, "இங்கே என்ன யூரின் டெஸ்ட்டா எடுப்பாங்க? மேக்கப் டெஸ்ட் தான்" என்றாள்.

"நீங்க அதுக்குதான் வந்திருக்கிங்களா?"

"இல்லை, அக்ரிமெண்ட். எனக்கு இந்த படத்தில சிஸ்டர் ரோல் கன்ஃபர்ம் ஆகியிருக்கு. கமலஹாசனுக்குத் தங்கச்சி!"

“அப்படியா! ஹீரோயின் செலக்ட் பண்ணிட்டாங்களா?”

“ஒண்ணும் அமையலையாம். இன்னும் ரெண்டு நாள்ல அமையலைன்னா மனிஷாவை புக் பண்ணப் போறாங்களாம். ஃபார்ட்டி டூ லவ் ஸ்டோரி பார்த்தே இல்ல?”

அவள் சட்டென்று ஒருமையில் அழைத்ததில் மனசு சுருக் என்றது. ‘ம்’ என்று மட்டும் சொன்னவள் எதிரே வெற்றிலைப் பெட்டியோடு வந்த அய்யாத்துரையைப் பார்த்துவிட்டு “சார்!” என்று எழுந்து வணக்கம் வைத்தாள்.

“யாரு?” என்றார் அவர். கண்ணாடி வழியாகப் பார்த்து.

“சார்... திலகா சார். காலேஜுக்கு வந்து பேசினிங்களே... ஸண்டே வரச் சொன்னிங்களே...”

“அட! அந்தப் பொண்ணா நீ. புடவையில அடையாளமே மாறிப் போய்ட்டேம்மா. நான் இந்தி ஆக்ட்ரஸ்தான் எதாச்சும் இன்விடேஷன் கொடுக்க வந்திருக்குதோன்னு நினைச்சேன் வா!. வா இப்ப உன்னைப் பார்த்தா புரொட்யூஸர்ஸ் சரண்டர்! மனிஷா கேன்ஸல்ட் வா, உள்ளேப் போகலாம்”

அத்தனை பேர் அமர்ந்து காத்திருக்க அவர் தன்னை மட்டும் அழைத்துச் சென்றதில் ஒரு சின்ன பெருமிதத்தை உணர்ந்தாள்.

ஒரு அறை வாசலில் நிறுத்திவிட்டு “இரு, வந்துட்டேன்” என்று உள்ளே சென்றார். வெளியே வந்தார். “வா!” என்றார்.

அந்த அறைக்குள் லேசான நடுக்கத்துடன் நுழைந்தாள். மேஜைக்கு அந்தப் பக்கம் நாற்காலியில் ஒரு இளைஞனும், மேஜையின் மூலையில் தொத்தியமர்ந்து ஒரு இளைஞனும் இருந்தார்கள்.



“இவர்தாம்மா மதியழகன். சேர்ல உக்காந்திருக்கிறவர் மாரியப்பன். இவங்கதான் புரொட்யூஸர்ஸ் பேப்பர்ல போட்டோவ வந்துச்சே. இந்தப் பொண்ணுதான். நம்பவே முடியலை இல்லை” என்றார் அய்யாத்துரை.

“வணக்கங்க” என்றுக் கைகூப்பினாள்.

புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டின் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிவிட்டு மதியழகன் அவளை உற்றுப் பார்த்தான். மேஜையிலிருந்து குதித்து சற்றுத் தள்ளிச் சென்று நின்று பார்த்தான்.

“கொஞ்சம் லெஃப்ட் லுக் கொடு. ஐ மீன் என் கையைப் பாரு” என்று தன் இடது கையை உயர்த்திக் காட்டினார். பார்த்தாள். இப்போது வலது கையை உயர்த்தி, “இப்ப ரைட்ல பாரு” என்றான். பார்த்தாள். “டவுன் லுக் ப்ளீஸ்...” என்றான். “சின் அப்” என்றான். “லேசா சிரிம்மா” புன்னகைத்தாள். “நல்லா வாய்விட்டு சிரிம்மா” சிரித்தாள். “நடந்து வாம்மா” வந்தாள். “திரும்பிப்போ” போனாள். “சேலை மடிப்பை எடுத்துட்டு ஒத்தையா போட்டுக்கோ” என்றான்.

தயங்கினாள். சேலையை ஒற்றைத் தலைப்பாகப் போட்டுக் கொண்டால். மெல்லிசான சேலை என்பதால் அங்கங்கள் பளிச்சென்று தெரியும்.

“என்னம்மா இது, என் முன்னாடியே உன்னை காஸ்ட்யூம் மாத்தச் சொல்லிட்ட

மாதிரி இப்படி முழிக்கிறே. ஸ்டரக்சர் தெரிய வேணாமா? டைட் குளோஸ்ல முகத்தை மட்டுமே படம் முழுக்க காட்டிட்டிருக்க முடியுமா? இது சினிமாம்மா, டி.வில. செய்தி வாசிக்கிற சங்கதி இல்லை. அதுக்குத்தான் முகம் மட்டும் ஒழுங்கா இருந்தாப் போதும். கழுத்துக்குக் கிழே திருவாரூர், தேரு மாதிரி இருந்தாலும் கவலை இல்லை. என்ன துரைண்ணே?" என்றுச் சிரித்தான் மதியழகன்.

இவர்களுக்கு என் முகம் பிடித்துப் போய்விட்டது. உடனலமைப்பும் அவர்கள் எதிர்பார்க்கிறபடி வடிவோடு இருந்துவிட்டால், என்னைத் தேர்வு செய்து விடுவார்கள். எனக்கு உடலமைப்பு வடிவோடுதான் இருக்கிறது. இது எனக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரிய வைக்க, கொஞ்சம் மன சங்கடங்களைத் தள்ளி வைத்து ஒத்துழைக் கத்தான் வேண்டும். கமலஹாசனுக்கு ஜோடியாக நடிப்பதென்றால் சும்மாவா?

திலகா தீர்மானத்துக்கு வந்து தோள் பட்டையில் போட்டிருந்த பின்னை நீக்கி, சேலையின் மடிப்புகளை நீக்கி ஒற்றையாகப் போட்டுக் கொண்டாள்.

"இப்படித் திரும்பும்மா..." "அந்தப் பக்கம்..." "லோ - ஹிப் பண்லாமில்லையா? ஸ்கார் ஒண்ணுமில்லையே..?"

"என்ன சார்?" என்றாள் புரியாமல்.

"லேசா லோ ஹிப்புல கட்டிக் காட்டச் சொல்றார்" என்று அவள் காதருகில் கிசுகிசுப்பாகச் சொன்னார் அய்யாதுரை, "தழும்பு எதுவும் இல்லையேன்னு கேட்டார்."



மறுத்து தலையசைத்து, "சார், ஆனா நான் டீசன்டாதான் நடிப்பேன்"

மாரியப்பன் சிரித்தான், "லோ ஹிப்ல புடவை கட்றவங்க எல்லாம் இண்டீசண்ட் பொம்பளைங்களா? ஏம்மா காலேஜ்ல படிக்கிற பொண்ணு இப்படி கர்நாடகமா இருக்கியே. உங்க காலேஜ்ல லேடி லெக்சரர்ஸ்கூட இப்பல்லாம் லோ ஹிப்ல புடவை கட்டிட்டு வர்றாங்கன்னு சொன்னாங்களே" என்றான்.

முதுகு காட்டியபடி திரும்பி நின்று சேலையை லோ - ஹிப்பில் இறக்கி விட்டுக் கொண்டு மீண்டும் இந்தப்பக்கம் திரும்பினாள்.

கடவுளே, என் மனசாட்சிக்கு எதிராக எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். எப்படியாவது இந்த கதாநாயகி சான்ஸ் எனக்குக் கிடைத்துவிட வேண்டும்.

"எதார்த்தம் ப்ளாக் பேசி நடிச்சிக் காமிம்மா."

அவளுக்கு மனதில் பூரிப்பு ஏற்பட்டது. உடலமைப்பில், முக அழகில் நான் தேறிவிட்டேன். அடுத்தக் கட்டமாக என் நடிப்புத் திறமையை நிரூபித்தாக வேண்டும். இதில் தேறி விட்டால்... ஹீரோயின்தான்.

திலகா தொண்டையைச் செருகிக் கொண்டாள்.

"நான் நடிச்ச நாடகத்திலேர்ந்து பேசிக் காட்டட்டுமா சார்?"

"சரி"

நாடகத்தின் ஒரு காட்சியை நடித்துக் காட்டினாள் உணர்ச்சிப் பூர்வமாக ஒரு

நீளமான வசனத்தைப் பேசி முடித்ததும் மதியழகன், மாரியப்பன் இருவரும் தங்களை மீறி கைத்தட்டினார்கள்.

மாரியப்பன் எழுந்து வந்து, "வொண்டர் ஃபுல் பெர்ஃபார்மன்ஸ்" என்று கை நீட்டி னான். சற்றேத் தயங்கிவிட்டு கை கொடுத்தாள். மென்மையாகப் பற்றிக் குலுக்கி விடுவித்தான்.

"மதி, எனக்கு எல்லா வகையிலயும் ஓகே" என்றான்.

"எனக்கும், டைரக்டர் பார்த்து ஓக்கே சொல்லிட்டாருன்னா நீதாம்மா ஹீரோயின்" என்றான் மதியழகன்.

முகம் பூரித்தாள் திலகா, "தேங்ஸ் சார். ரொம்ப தேங்ஸ் சார்..."

பிறகு அவர்களுக்குள் பேசிக் கொண்டார் கள். அய்யாத்துரை ஓடிப்போய் ஒரு ஸ்ட்ரா போட்ட கறுப்பு நிற குளிர்பாணத்துடன் வந்து அவளை உட்கார வைத்துக் கொடுத்தார்.

"மேக்கப் டெஸ்டும் வேணுமா வேணா மான்னு டைரக்டர் பார்த்து முடிவு செய் யட்டும்."

"டைரக்டர் கிடைக்கிறாரா பாரு"

போன் செய்து எங்கோ பேசினார்கள். பேசினார்கள். பேசினார்கள்.

"இதோ பாரும்மா திலகா, டைரக்டர் ஹெரிட்டேஜ் ஹோட்டல்ல ஸ்டோரி டிஸ்கஷன்ல இருக்கார். நாளைக்கு ஈவினிங் ஒரு ஆறு ஆறரைக்கு இங்க வந்துட்டியின்னா இங்கேர்ந்து அங்க அழைச்சுட்டுப் போயிட



றோம். அவர் பார்த்துட்டாருன்னா, ஓ.கே. பண்ணிட்டாருன்னா மறுநாளே ஸ்டில்ஸ் எடுத்து எல்லா பத்திரிகைகளிலேயும் நியூஸ் பிளாஷ் பண்ணிடலாம். டைரக்டர் ஓ.கே. பண்ணினதும் டெர்ம்ஸ், அக்ரிமெண்ட் இதைப் பத்தியெல்லாம் பேசிடலாம். ஒரு கண்டிஷன் இருக்கும்மா. உன்னை நாங்க செலக்ட் பண்ணி வெச்சிருக்கோம்னு யார் கிட்டயும் மறந்துபோய் கூடப் பேசிடாதே. நேரா நியூஸ்லதான் வரணும். புரிஞ்சுதா?"

"சரி சாரி..."

"நாளைக்கு வந்துட்றியா?"

"அவ்வளவு அதிகாலை வர்றது கொஞ்சம் சிரமமா இருக்கும் சார்."

"அதிகாலையியா? உன்னை வரச் சொன்னது, ஈவினிங் ஆறரைக்கு. காலேஜ் எத்தனை மணிக்கு முடியுது?"

"அஞ்சரைக்கு."

"அங்கேர்ந்து நேரா வந்துட வேண்டியது தானே?" என்ற மதியழகன் மேஜை டிராயரைத் திறந்து ஒரு புத்தம் புது பத்து ரூபாய் கட்டெடுத்தான். பாக்கெட்டிலிருந்து ஒரு ரூபாய் நோட்டெடுத்து அதில் செருகி, "இந்தாம்மா, ஆயிரத்தி ஒண்ணு டோக்கன் அட்வான்ஸ்தான் இது. அமோகமா வருவே." என்றான்.

பணம் வாங்கிக் கொண்டபோது மகிழ்ச்சி யுடன் திக்குமுக்காடல்களில் விரல்கள் நடுங் கின அவளுக்கு.

***



# 7

அந்த அறையின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார் கிரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் நியூட்டன்.

அந்த விசாலமான அறை இருட்டா யிருந்தது. ஒரு ஸ்லைட் புரொஜக்டர் நடுவில் இருந்தது. எதிரே வெள்ளை ஸ்க்ரீன். அதில் ஸ்லைடுகள் மாற்றப்பட்டன. பழைய குற்ற வாளிகளின் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் - நேர்முகமாக, வலத்தோற்றம், இடத் தோற்றம் என்று மூன்று விதங்களில்.

"இவனா?" என்றார் ஸ்லைடைப் போட்ட சப் இன்ஸ்பெக்டர் சார்லஸ்.

அருகில் கைகட்டி நின்றபடி ஸ்க்ரீனைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த நாற்பது வயது ஆசாமி மறுத்து தலையசைத்து, "இல்லை" என்றான்.

அறையின் பெரிய விளக்கைப் போட்ட நியூட்டன் அந்த ஆசாமி தோளில் கை வைத்து, "என்ன சொல்றாரு நண்பரு?" என்றார்.

"இதுவரைக்கும் ஐநூறு போட்டோஸ் பார்த்துட்டார். ஒரு சாயல்கூட செலக்ட் பண்ண மாட்டேங்கறார்."

"அதெப்படி பண்ணுவார்? இவர்தான் கொலையில உடந்தையாச்சே.

"அய்யோ!" என்றான் அவன்.

"டேய்! பிச்சுமணி, பிச்சிப்புடுவேன்.



நிஜத்தைச் சொல்லு, நீ வாட்ச்மேன். உன்னை மீறி உனக்குத் தெரியாம அந்த பாத்ரூம் கிளீன் பண்ற கிழவன் எப்படி டப்பிங் தியேட்ட ருக்குள்ளேப் போக முடியும்? அந்த டப்பிங் தியேட்டருக்குள்ளே போக, வர ஒரே ஒரு வழிதான். ஒரே ஒரு கேட்டுதான். அந்த கேட் பக்கத்தில் ஸ்டூல் போட்டு உக்காந்திருந்தவன் நீ. அந்த கிழவன் உள்ளேப் போனதையும் பார்க்கலைன்றே, திரும்ப வெளில போனதை யும் பார்க்கலைன்றே. எப்படி நம்பறது?"

"சார், முண்டகன்னியம்மன் மேல சத்தியமா நான் பார்க்கலை. அசந்தப்போ எப்படியோ அவன் உள்ளேப் போய்ட்டு வெளியே போயிருக்கலாம்."

"கோர்ட்ல என் பக்தன் சொல்றது உண்மைன்னு உன்னோட முண்டகன்னியம்மா வந்து சொல்லுமா? ஒரு தடவை அசந்து போகலாம். ரெண்டு தடவை எப்படிப்பா அசந்தே?"

அவனுக்குப் பதில் சொல்லத் தெரிய வில்லை.

"அதனால நாங்க என்ன நினைக் கிறோம்னா, நீயும் இந்தக் கொலைல உடந்தையா செயல்பட்டிருக்கே! கொலை காரன்கிட்ட கணிசமா ஒரு தொகை வாங்கிட்டு உள்ளே அனுப்பிச்சுட்டே"

"ஆண்டவனே, நான் எப்படி உங்களை நம்ப வைக்கிறதுன்னு புரியலையே.."

"இவ்வளவு நேரம் மரியாதையா நிக்க வச்சி விசாரிச்சோம். இப்ப குப்புற படுக்க வச்சி, உள்ளங் கால்ல லத்தியால அன்பா தடவிக்

கொடுத்துக்கிட்டே விசாரிக்கலாம்னு இருக் கோம். அப்போ விஷயம் பூரா கடகடன்னு வந்துடும்" என்றார் சப் இன் பெக்டர் சார்லஸ், "வாப்பா ராஜா, வந்து படு"

பெஞ்சைக் காட்டினார். அவன் கெஞ்சி னான். கதறினான். இரண்டு கான்ஸ்டபிள்கள் வலுக்கட்டாயமாகத் தூக்கிப் படுக்க வைத்து, அழுத்திப் பிடிக்க, சார்லஸ் உள்ளங்கால்களில் லத்தியால் சுளீர் என்று அடித்தார்.

அவன் பெரிய எழுத்துக்களில் அலறினான்.

"சொல்லுடா நாயே! யாரவன்? எவ்வளவு கொடுத்தான்? டாய் லட் ரூமில நீ யூரின் போய்ட்டு திரும்பினப்போ அவன் கழுவறதுக் காக உள்ளே வந்ததைப் பார்த்ததா சொல்றியே, வழக்கமா வர்றவன் இல்லையேன்னு ஏன் உனக்குத் தோணலை? ஏன் அவனை நிறுத்தி விசாரிக்கலை?"

"அய்யா! ஏதோ சிந்தனையில அசால்ட்டா இருந்துட்டேங்க. அவனைப் பார்த்தேனே ஒழிய கேக்கணும்னு தோணலிங்கய்யா. அதாங்க நிஜம். அய்யோ!" என்றான் வலி தாங்காமல்.

"சார்லஸ், இப்படி வாங்க" என்றார் நியூட்டன்.

இருவரும் சற்றுத் தள்ளிச் சென்று பேசினார்கள்.

"என்னோட யூகம் என்னன்னா, கக்கூஸ் கழுவுற உபகரணங்கள் நரைச்ச மீசை, முண்டாசுன்னு எல்லாத்தையும் ஒரு பையி லயோ, பெட்டியிலயோ போட்டு எடுத்துக் கிட்டு சாதாரண முகத்தோட அவன் உள்ளே நுழைஞ்சிருக்கணும். அதானல வாட்ச்மேனுக்கு அவனை நிறுத்தி விசாரிக்கத் தோணலை. உள்ளே வந்ததும் பாத்ரூம் கிளீன் பண்ற கிழவன் மாதிரி அடையாளம் மாறியிருக்க ணும். கொலை செஞ்சி முடிச்சுட்டு, தன் வேஷத்தைக் கலைச்சு சாதாரண முகத்தில வெளியேறியிருக்கணும் அவன். எதுக்கும் இன்னும் ரெண்டு தட்டி தட்டி விசாரிச்சுட்டு நிறுத்திடுங்க. இந்த வாட்ச்மேன் கொஞ்சம் ஜென்யூனாத்தான் தெரியறான்."



"சரி சார். வாட்ஸ் அவர் நெக்ஸ்ட் மூவ்?"

"கொலை செய்யப்பட்டிருக்கிறது பாபுலர் நடிகர். அதனால அவரோட மன்றத்துக்காரங்க எல்லாம் ஊர்வலம் நடத்தி டி.ஜி.பி. கிட்டே சீக்கிரம் குற்றவாளியைக் கண்டுபிடிக்கச் சொல்லி மனு கொடுத்துருக்காங்க. நமக்கு ஒரு கைரேகை இல்லை. ஒரு தடயம் இல்லை. வீடு இல்லை. எதை வெச்சு கேஸில ஒரு பிரேக் ஏற்படுத்த றதுன்னு புரியலை..காலையிலேர்ந்து எனக்கு ஒரு புது கோணம் தோணிட்டிருக்கு."

"என்ன சார்?"

"சூர்யாசந்தரை லவ் பண்றதா ஓபன் ஸ்டேட்மெண்ட் விட்டா இல்லையா நடிகை பிரதீபா, அதில அவளோட சித்தப்பாவுக்கு ரொம்ப கோபமாம். பிரதீபாவுக்கு கார்டியன் அவளோட சித்தப்பாதான். கல்யாணம், கில்யாணம் பண்ணிட்டுப் போய்ட்டான்னா புக் பண்ணி வெச்சிருக்கிற பதனைஞ்சு புரொட்யூசர்கம் அட்வான்சை திருப்பிக் கேப்பாங்க! அதனால..."

"அதனால அந்த சித்தப்பா ஆள வெச்சு

சூர்யாசந்தரை தீர்த்துக் கட்டியிருக்கலாம்னு நினைக்கிறிங்களா? நல்ல கோணம்தான். அவரை ரகசியமா கண்காணிக்கட்டுமா சார்?"

"செய்யுங்க. நான் ஒரு தடவை நேர்ல அவரைப் பார்த்து விசாரிச்சுட்டு வந்துட லாம்னு இருக்கேன்" என்றார் நியூட்டன்.

## 8

### பத்து வருடங்களுக்கு முன்பு...

மதியம் திலகா வீடு திரும்பியபோது, தர்மராஜ் அவளிடம் எதுவும் பேசவில்லை.

"என்னண்ணா, ஏன் உம்முன்னு இருக்கே?"

"தலைவலி" என்றான்.

மதிய சாப்பாட்டுக்குப் பிறகு புத்தகம் படித்தபடி, எதிர்காலக் கனவுகளில் ஆழ்ந்தபடி உறங்கிப் போனாள். மாலை கண் விழித்த போது, அண்ணன் வீட்டில் இல்லை. 'வெளியே போகிறேன். வர நேரமாகும்' என்று சீட்டு எழுதி வைத்திருந்தான்.

இரவு ஒன்பது மணிக்கு வீட்டுக்குத் திரும்பினான் தர்மராஜ்.

"எங்கண்ணா போய்ட்டு வர்றே?" என்றாள் திலகா.

"இந்தக் கேள்வியைக் கேட்க உனக்கு உரிமை இருக்குன்னு நினைச்சா, இதேக் கேள்விக்கு முதல்ல நீ பதில் சொல்லு திலகா."



"என்ன கேக்கறே?" என்றாள் புரியாமல்.

"காலையில காலேஜ்ல ஸ்பெஷல் கிளாஸ்னு என்கிட்ட பொய் சொல்லிட்டு, ஆட்டோல ஏறி எங்கப் போய்ட்டு வந்தேன்னு கேக்கறேன்."

திடுக்கிட்டாள். மென்றாள். தயங்கினாள்.

"வந்துண்ணா, ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து முட்டுக்காடு போட் ஹவுஸ் போய் படகு விட்டுட்டு வந்தோம். இதைச் சொன்னா நீ போக விடுவியோ மாட்டியோன்னுதான் பொய் சொன்னேன்."

"மறுபடி பொய் சொல்றியேம்மா. நீ போனது முட்டுக்காடு இல்லை. சினிமாக்காடு! படகு விடறதுக்கு போகலை. மானத்தை விடறதுக்கு அச்சாரம் வாங்கிட்டு வரப்போனே. சரியா?"

"அண்ணா!"

"கஜபதி ஃபிலிம் சர்க்யூட். அதில மதி யழகன், மாரியப்பன்னு ரெண்டு ப்ரொடியூ சர்ஸ். அவங்க எடுக்கற தமிழ் படத்துக்கு கதாநாயகி வேணும். புதுமுகத் தேர்வுக்கு நீ போயிருந்தே சரியா?"

தலைகுனிந்து மெதுவாகச் சொன்னாள், "ஆமாம்."

"நீ தூங்கிட்டிருந்தப்போ உன் ஹேண்ட் பேகை சோதனைப் போட்டேன். அந்தக் கம்பெனியோட விசிட்டிங் கார்டும், ஆயிரத்து ஒண்ணு பணமும் கிடைச்சது. நேரா அந்தக் கம்பெனில போய் விசாரிச்சேன். அப்புறம் எனக்குத் தெரிஞ்ச சில சினிமா ஃப்ரெண்ட் சைப் பார்த்து அந்த கம்பெனி பத்தி விபரம்

விசாரிச்சுட்டு வந்திருக்கேன். அது சுத்த ஃப்ராடு கம்பெனி. அவங்க சொல்றதெல்லாம் ரீலு! நடிக்க சான்ஸ் கேட்டு வர்றவங்க கிட்டெல்லாம் பத்தாயிரம் கொடு, இருப தாயிரம் கொடுன்னு பிடுங்கிக்கிட்டு நாமம் போடற கம்பெனி. இதுவரைக்கும் அந்தக் கம்பெனி ஒரு படம் கூட தயாரிச்சதில்லை. நாளைக்குக் காலைல முதல் வேலையா நீயும், நானும், அந்த கம்பெனிக்குப் போறோம். வாங்கின அட்வான்ஸ் பணத்தை திருப்பிக் கொடுக்கறோம். ஒரு பெரிய கும்பிடு போட்டுட்டு வந்துடறோம். நீ எதிலயும் கையெழுத்துப் போட்டுடலையே?"

அமைதியாக இருந்தாள் திலகா.

"உன்னைத்தான் கேக்கறேன். காதென்ன செவுடா? வாயைத் திறந்து பதில் சொல்லு. நீ எதிலயாவது கையெழுத்துப் போட்டியா?"

"இல்லை" என்றாள் முணுமுணுப்பாக.

"நீயா இவ்வளவு பெரிய முடிவெடுக்கிற அளவுக்கு உலகம் தெரிஞ்சவளாய்ட்டியா? சினிமா மேல என்ன உனக்கு அவ்வளவு வெறி? சினிமா ஆசையை இன்னையோட மறந்துடணும், சொல்லிட்டேன்."

"அண்ணா, நடிக்க சான்ஸ் கொடுக்கறதுக்கு பணம் வாங்கற கம்பெனி எப்படி எனக்கு அட்வான்ஸ் கொடுக்கும்? என்கிட்டயும் பணம் கேட்டிருக்கணுமே?"

"அசடு! உன்னை வெச்சி வேற பிளான் எதாச்சும் இருக்கலாம்."

"நாலு மலையாளப் படம் எடுத்திருக்காங்கண்ணா. அவங்க எடுத்த படங்களோட



ஸ்டில்ஸ்கூட அந்த ரூம்ல இருந்திச்சு. அவங்க ஒண்ணும் ஏமாத்தற கம்பெனி இல்லை. நான் சினிமால நடிக்கக் கூடாதுன்னு நீ நினைக்கிறே. அதனால இப்படியெல்லாம் சொல்றே!"

"உன்னை நல்லா பிரைய்ன் வாஷ் பண்ணிருக்காங்க. காசு கொடுத்தா சினிமா ஸ்டில்ஸை விலைக்கு வாங்கி நம்ம வீடு பூரா கூட மாட்டிக்கலாம் திலகா. நான் சொல்றதை நம்பு."

"என்னை ஏன் ரொம்ப சின்ன குழந்தையா நினைக்கிறே? நானும் காலேஜ்ல படிக்கிறேன். நல்லவங்க யாரு, கெட்டவங்க யாருன்னு எனக்குத் தெரியும். நீ அவங்களை மீட் பண்ணலை. நான் மீட் பண்ணேன். அவங்களைப் பார்த்தா ஏமாத்தறவங்களாத் தெரியலை. ரொம்ப பிசியான கம்பெனி. எவ்வளவு மாடர்னான ஆபீஸ் தெரியுமா? எவ்வளவு பேரு வெய்ட் பண்ணிட்டிருந்தாங்க தெரியுமா? மேஜை மேல மூணு போன். விடாம ஒண்ணு மாத்தி ஒண்ணு அடிச்சிட்டிருந்திச்சு. பி.வாசு சார்கிட்ட பேசறாங்க. சரத்குமார் சார்கிட்ட பேசறாங்க. மகேந்திரன் சார்கிட்ட பேசறாங்க. என் தங்கச்சி பெரிய ஸ்டார் ஆயிடுவாளேன்னு எனக்குப் பொறாமைன்னு வெளிப்படையா சொல்லேன்."

அதிர்ந்து போய் நின்றான் தர்மராஜ்.

"என்னை எவ்வளவு சீப்பா நினைச்சுட்டே திலகா? உன் மேல எவ்வளவு பாசம் வெச்சிருக்கேன்னு உனக்குத் தெரியாதா?"

"என்மேல நீ வெச்சிருக்கிற பாசம் உண்மைன்னா என்னோட வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு கொடு. முட்டுக்கட்டையா இருக்

காதே! என்னைப் பொருத்தவரைக்கும் நான் ரொம்ப தீர்மானமா இருக்கேன். நடிகை ஆகியேத் தீருவேன். அதுக்கான தகுதி எனக்கு இருக்கு. என் இஷ்டப்படி முடிவெடுக்கற வயசு எனக்கிருக்கு. அதை ஞாபகம் வெச்சுக்கோ."

ஓங்கின குரலில் சொல்லிவிட்டு அறைக்குள் சென்ற தங்கையை வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தான் தர்மராஜ்.



## 9

"குட் மார்னிங் சார்" என்றாள் ரிசப்ஷனிஸ்ட் பத்மா.

கடந்தான்.

"குட் மார்னிங் சார்" என்றான் கேசவன்.

கடந்தான்.

"குட் மார்னிங் சார்"

"குட் மார்னிங் சார்"

"குட் மார்னிங் சார்"

..............

..............

கதவைத் திறந்து விட்டு பிரீஃப் கேசை வாங்கிச் சென்று மேஜைக்குப் பக்கத்தில் வைத்தான் பியூன்.

கோட்டைக் கழற்றி அருகில் இருந்த ஸ்டாண்டில் மாட்டினான் வெற்றிச் செல்வன். உயர் முதுகு கொண்ட சுழல் நாற்காலியில் அமர்ந்தான்.



பட்டன் அழுத்தி இண்டர்காமில், "சாரதாவையும், மாதவனையும் உடனே என் ரூமுக்கு வரச் சொல்லுங்க" என்றான்.

சில விநாடிகளில் இரண்டு பேரும் உள்ளே வந்து நின்றார்கள்.

"மாதவன், உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?"

"ஒரு பையன் மட்டும்தான் சார்."

"சாரதா, உனக்கு எப்போ கல்யாணம்?"

"பார்த்துக்கிட்டிருக்காங்க சார். இந்த தை மாசத்தில முடிச்சிடணும்னு அப்பா தீவிரமா இருக்கார்."

"ஐ. ஸீ, மாதவன், உங்க மனைவி உடல் நலமுற்றவங்களா?"

"இல்லையே சார். ஏன் அப்படிக் கேக்கறீங்க?"

"ஏம்மா சாரதா, யாரையாவது லவ் பண்றியா?"

"நோர் சார். எதுக்காக இப்படி ரெண்டு பேரையும் கூப்புட்டு வெச்சு சம்பந்தமில்லாம பர்சனல் கேள்விகள் கேக்கறீங்க சார்?"

"குழம்புதில்லை. ரெக்கார்ட்ஸ் ரூம்ல நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கட்டிப் பிடிச்சிட்டிருந்ததைப் பார்த்த பியூன் ஆறு முகத்துக்கும் இதே மாதிரிதான் குழம்பிப் போயிருக்கும் அவன் சொன்னதைக் கேட்டு எனக்கும் இதே மாதிரிதான் குழம்பிப் போயிருக்கும்."

இரண்டு பேரும் திடுக்கிட்டார்கள். தலை

குனிந்தார்கள்.

"என்ன மாதவன் நீங்க சாரதாவை ரெண்டாந்தாரமா கல்யாணம் பண்ணிக்கப் போறிங்களா?"

"இல்லை சார்."

"ஏம்மா, அப்போ குளிர் காய்ஞ்சதுக்கு அர்த்தம் என்ன? தை மாசம் தாலி கட்டப் போற புருஷனைப் பத்தி யோசிச்சுப் பார்த்தியா? உங்க கேரக்டர்ஸ் எப்படி இருந்தாலும் அதைப் பத்தி எனக்குக் கவலையில்லை. என் ஆபீஸ் எல்லைக்குள்ளே அசிங்கம் நடந்தா அது கம்பெனியோட பேரையும் பாதிக்கிற விஷயம்! திஸ் ஈஸ் த ஃபர்ஸ்ட் அண்ட் லாஸ்ட் வார்னிங்! போங்க! மனசை முதல்ல கழுவுங்க."

குனிந்த தலைகளுடன் இருவரும் வெளியேறினார்கள்.

ஆபீஸ் ஃபைல்களைப் பார்க்கத் துவங்கினான் வெற்றிச் செல்வன். செகரெட்டரி சரவணன் உள்ளே வந்தான்.

"சார், உங்களுக்கு இன்னைக்கு மத்தியானம் ஹோட்டல் தாஜ்ல டெல்லி ரெப்ரசென்டேடிவோட ஒரு பிசினெஸ் லன்ச் இருக்கு."

"யெஸ், நினைவிருக்கு."

"ஆனா... வீட்லேர்ந்து மேடம் சாப்பாடு கொடுத்தனுப்பியிருக்காங்க."

"மை காட்! நான் காலைல வீட்ல சொல்லிட்டு வர மறந்துட்டேன்."

வெற்றிச் செல்வன் டெலிபோன் எடுத்தான்.



மறுமுனையில், "ஹலோ" என்றாள் ஜானகி.

"ஜானு, நான்தான், இன்னைக்கு ஒரு பிசினெஸ் லன்ச் இருக்கும்மா எனக்கு. நான் சொல்ல மறந்துட்டேன். நீ வழக்கம்போல சாப்பாடு அனுப்பி வெச்சுட்டே. என்ன செய்யலாம்?"

"என்னங்க இது, 'இன்னைக்கு நம்ம வெட்டிங்டே. அதனால ஸ்பெஷல் அயிட்டம்ஸ் செஞ்சி அனுப்பறேன்'னு நீங்க புறப்படறப்பவே சொன்னேன். தலையை ஆட்டினீங்களே. ஸ்பெஷல் டிஷஷஸ் வெச்சிருக்கேன். எதையும் சாப்பிடப் போறதில்லையா?"

"சாப்பிடறேன் ஜானு. பிசினெஸ் லன்ச்சை கேன்சல் பண்ணிடறேன். எனக்கு உன்னை சந்தோஷமா வெச்சிக்கிறதுதான் மெயின் பிஸ்னெஸ், ஓக்கேயா? திருப்திதானே?"

"சாப்டுட்டு டேஸ்ட் எப்படி இருந்திச்சுன்னு சொல்லுங்க."

"கண்டிப்பா."

போனை வைத்துவிட்டு சரவணனைப் பார்த்து சிரித்தபடி உதடுகளைப் பிதுக்கினான் வெற்றிச் செல்வன்.

"ஹோட்டலுக்கு போன் செஞ்சி ரிசர்வேஷனை கேன்சல் செஞ்சிடுப்பா. ரெப்சுக்கும் சொல்லு. அவங்களை ஈவினிங் மீட் பண்றேன்."

"சரி சார். ஈவினிங் எத்தனை மணிக்கு அவங்களை வெய்ட் பண்ணச் சொல்லட்டும் சார்?"

"அஞ்சி மணி. அவங்களைப் பார்த்துட்டு வீட்டுக்குப் போய்ட்டு வைஃபை கூட்டிக்கிட்டு பீச், ஹோட்டல் எங்கயாச்சும் போகணும்பா. இன்னைக்கு வெட்டிங்டே எங்களுக்கு."

"மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே சார்"

அவன் அறையை விட்டு வெளியேறியதும், வெற்றிச் செல்வன் கம்ப்யூட்டரை ஆன் செய்து கொண்டு கணக்குகளைப் பார்க்கத் துவங்கினான்.

பத்து நிமிடம் கழித்து இன்ட்டெர்காமில், "நிவேதாசை வரச் சொல்லுங்க" என்றான்.

காட்டன் புடவை கட்டிய, வெளிறின ரோஜா நிற லிப்ஸ்டிக் தீற்றிய, ஸ்டைலாக கூந்தலை வெட்டி விட்டிருந்த நிவேதா அறைக்குள் வந்தாள்.

"மேடம், நீங்க ஆபீசுக்கு ரொம்ப இர்ரெகுலரா வர்றிங்கன்னு உங்க அட்டென்டென்ஸ் புக் சொல்லுது. போன மாசம் மட்டும் மூணு நாள், ரெண்டு நாள், மூணு நாள்னு மொத்தம் எட்டு நாள் லீவு போட்ருக்கிங்க. வாட் ஈஸ் திஸ்? ம்?" என்றான் முகத்தைக் கண்டிப்பாக வைத்துக் கொண்டு.

"சார், வந்து... நான் ஒரு சுவாரசியமான சிக்கல்ல மாட்டிக் கிட்டு இருக்கேன். என்னால் விபரமா சொல்ல முடியாது"

"சிக்கல்ல சுவாரசியமான சிக்கல்னு ஒண்ணு இருக்கா? பாஸ் கேக்கறப்ப விளக்கம் சொல்ல வேண்டியது உங்க கடமை மேடம்"

"வியாபார விஷயமா என்னோட் ஃபிரண்டு ஒருத்தர் வெளியூர் போறப்ப



எல்லாம் என்னை லீவு போட்டுட்டு வரச் சொல்றார். அவரோட அவர் போற ஊருக்கெல்லாம் போக வேண்டியிருக்கு."

"அவர் கூப்புட்டா நீங்க போயாகணும்னு எதாச்சும் ஒப்பந்தமா?"

"என்ன சார் பண்றது? நான் லோயர் மிடில் கிளாஸ். தேவைகள் அதிகம். அவர் ஒவ்வொரு தடவை வெளியூர் அழைச்சிட்டுப் போறப்பவும் ஜிமிக்கி, வளையல், செயின்னு தங்கப் பரிசாக் கொட்டறாரே."

"எதுக்கு அவர் அதெல்லாம் உங்களுக்கு வாங்கித் தரணும்?"

"அதை அவரைத்தான் கேட்டுச் சொல்லணும்."

"கேட்டுச் சொல்லுங்க மேடம்."

அவள் புன்னகைத்தபடி மேஜையைச் சுற்றிக் கொண்டு அவனருகில் வந்து குனிந்து அவன் காதருகில், "எதுக்கு சார் எனக்கு அதெல்லாம் வாங்கித் தர்றீங்க? என் பாஸ் கேக்கறார். பதில் சொல்லணும்" என்றாள். அவள் அணிந்திருந்த டாலர் பொருத்தின செயின் ஊஞ்சலாடியது.

அவள் கழுத்தில் அப்படியே கைபோட்டு இழுத்து, இதழ்களில் முத்தமிட்டு விலக்கி, "இதுக்குத்தான்" என்றான் வெற்றிச் செல்வன்.

"ஆபீஸ்ல இப்படி எல்லாம் நடந்துக்கறிங்களே, கம்பெனிக்குன்னு ஒரு இமேஜ் இல்லையா?"

"முதலாளிங்கிறவன் விதிகளை நிர்ணயிக்கிறவன் டார்லிங், விதிகளுக்குக் கட்டுப்

படறவன் இல்லை. அண்டர்ஸ்டாண்ட்?" என்றவன் ஒலித்த போனை எடுத்து, "ஹலோ வெற்றி ஹியர்" என்றான்.

"ஆனா இன்னிக்கு ஒரு அபாரமான தோல்வி இருக்குங்க உங்களுக்கு?"

"யார் நீங்க? என்ன வேணும்?"

"உங்க உயிர். நீங்க கேட்டா தர மாட்டிங்க. நானா எடுத்துக்கப் போறேன். இன்னைக் குள்ளே இன்னிக்கு உங்க வாழ்க்கை காலண் டர்ல கடைசித் தேதி! ஏதாச்சும் மிச்ச, சொச்ச ஆசைகள் இருந்தா, இன்னைக்குள்ளே நிறை வேத்திக்க முடிஞ்சா, கோ அஹெட்."

"வாட் நான்சென்ஸ்! யாரு நீ?"

"உன்னைக் கொலை செய்யப் போறவன். உன்னோட சம்பந்தப் பட்டவன்தான். உன் னால பாதிக்கப்பட்டவன்தான். வெச்சிடவா?"

எதிர்முனை வைக்கப்பட்ட பிறகும் வெற்று முயற்சியாக "ஹலோ, ஹலோ" என்று தட்டிப் பார்த்து வைத்துவிட்டு கர்சிப் எடுத்து நெற்றியை ஒற்றிக் கொண்டான்.

"என்னாச்சு சார்? போன்ல யாரு?"

"சம் இடியட்" என்றான். போனில் சொல்லப்பட்டவைகளை அப்படியேச் சொன்னான்.

"அய்யோ! போலீஸ்ல சொல்லிடுங்க சார்."

வெற்றிச்செல்வன் சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தான். "நீ உன் சீட்டுக்குப் போ நிவேதா" என்றான், யோசிக்கத் துவங்கினான்.

***





# 10



## பத்து வருடங்களுக்கு முன்பு...

**மா**லை ஆறு மணிக்கெல்லாம் சினிமா கம்பெனியின் ஆபிசுக்கு வந்து விட்டாள் திலகா. புடவையை லோ - ஹிப்பில் கட்டி யிருந்தாள். புடவைத் தலைப்பை ஒற்றையாகப் போட்டிருந்தாள். காத்திருக்கச் சொல்லப்பட்ட தால் புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டு காத்திருந்தாள்.

ஏழு மணிக்குதான் வெளியே எங்கோ போயிருந்த மதியழகனும், மாரியப்பனும் வந்து சேர்ந்தார்கள்.

"வாம்மா, புரொட்யூசர்ஸ் அசோசியே ஷன்ல ஒரு அவசர மீட்டிங், அதான் லேட்டாய் டுச்சு. போலாமா? காபி எதுவும் கொடுத்தா னுங்களா?"

"பரவால்லை சார். போலாம்"

"இரும்மா." என்ற மதியழகன் அங்கே இருந்த பொறுப்பாளனை அழைத்து, "அறிவிருக்காடா உனக்கு? ஒரு காபிகூட கொடுக்கணும்னு தோணலையா உனக்கு, எடுத்துட்டு வா! இரு. கடை காபி வேணாம். என் வீட்லேர்ந்து வந்த காபி ஃபிளாஸ்கல இருக்கும் பாரு. கொண்டு வா. சீக்கிரம்" என்று சத்தம் போட்டான்.

காபி வந்து குடித்த பிறகு புறப்பட்டார் கள்.

காரை மாரியப்பன் ஓட்டினான். அருகில் மதியழகன். பின் சீட்டில் அந்தக் காரில் ஏர்கண்டிஷனர் நிரப்பிய அதிகமான குளிரில் வெடவெடத்து ஒடுங்கி திலகா,

கார் நட்சத்திர ஹோட்டல் ஹெரிட்டேஜ் வந்து நின்றது.

ஒன்பது மாடிகள். அதில் ஒன்பதாவது மாடியில் இருந்த அறைக்கு லிஃப்டில் பயணப்பட்டு வந்தார்கள். வராந்தாவில் நடந்தார்கள்.

"மதி, டைரக்டர் எத்தனை மணிக்கு வர்றேன்னாரு?"

"எட்டு மணிக்கெல்லாம் கரெக்ட்டா வந்துடறேன்னு சொல்லிருக்கார்"

"வீடியோ காமெராவுக்குச் சொல்லனு மான்னு கேட்டியா?"

"கேட்டேன். நான் முதல்ல முகத்தைப் பார்க்கறேன். ரெண்டு வார்த்தை பேசவிட்டுப் பார்த்தாலே தேறுமா தேறாதான்னு முடிவு செஞ்சிடுவேன்னு சொன்னாரு."

"திலகாவைப் பிடிக்கலைன்னு யாரும் சொல்ல முடியாது."

சாவி போட்டு அறைக் கதவைத் திறந்தான் மதியழகன். உள்ளே வந்து ஸோபாக்களில் அமர்ந்தார்கள். மாரியப்பன் தன் உதட்டில் இரண்டு சிகரெட்டுகளை வைத்துப் பற்ற வைத்து ஒன்றை மதியழகனிடம் கொடுத்தான்.

"நாங்க எச்சில்னு பார்க்கறதில்லை. ரொம்ப திக்கான ஃபிரண்ட்ஸ். எங்களுக் குள்ளே எந்த ஒளிவு மறைவும் இல்லை."



"அப்படியா சார்?" என்றாள்.

"இவன் கொஞ்சம் சபல கேஸ். வெளியூர் போயிட்டு வந்து கதை கதையா சொல்வான். கதவைத் தாழ்ப்பாள் போட்டதிலேர்ந்து ஆரம்பிச்சு சொல்லியாகணும் இவனுக்கு."

லேசாகச் சிரித்து வைத்தாள். இதென்ன விவஸ்தை இல்லாமல் இந்த விஷயத்தைப் பற்றி என்னிடம் பேசுகிறார்கள்?

"உங்க காலேஜ்ல போதைப் பழக்கம் நிறைய பொண்ணுங்களுக்கு உண்டுன்னு ஒரு பத்திரிகையில எழுதியிருந்தானே.. அப்படியா திலகா?"

"அதெல்லாம் சும்மா சார். ஏதோ ஒண்ணு, ரெண்டு பேர் அப்படி இருக்கலாம். பத்திரிகை யில மிகைப்படுத்தி எழுதிட்டாங்க."

"நீ எப்படி? டேஸ்ட் பண்ணிப் பார்த் திருக்கியா?"

"அய்யோ! சேச்சே! அதெல்லாம் இல்லை."

"ஒரு அனுபவத்துக்காக டேஸ்ட் பண்ற தில என்ன தப்பிருக்கு? நான் ஒரு தடவை ஒரு போதை மருந்தை டேஸ்ட் பண்ணிப் பார்த் திருக்கேன் சும்மா ஜிர்ருன்னு ஏறிச்சு போதை" என்றான் மதியழகன்.

"போதை மருந்து இல்லாமலேயே ஜிர்ருன்னு போதையை ஏத்தற ஒரே விஷயம் செக்ஸ்தான்" என்றான் மாரியப்பன்.

"நான் சொன்னேன்ல, இவன் சபல கேஸ்னு. அதை நிரூபிக்கிறான். காலேஜ் பொண்ணுங்கல்லாம் இப்ப எதுக்கும் துணிஞ்சுட்டாங்களாமே. பாய் ஃபிரண்ட்ஸ்

வெச்சுகிட்டு சினிமா, ஹோட்டல்னு சுத்தறது.. இன்னும் துணிச்சலான பொண்ணுங்க லாட்ஜ் வரைக்கும் போறாங்களாமே.. அப்படியா?"

"சார், எல்லாத் துறையிலயும் நல்லவங்களும், கெட்டவங்களும் இருக்கத்தானே செய்வாங்க? சினிமா கம்பெனிகள்லயே நல்ல நேர்மையான கம்பெனியும் இருக்கு, ஏமாத்தற கம்பெனியும் இருக்கில்லையா?"

"கரெக்ட்டு, கரெக்ட்டு நான் கேக்க வந்தது... நீ எந்த அளவுக்கு சோஷியலனு தெரிஞ்சுக்கறதுக்குத்தான். இப்ப சினிமாவுக்கு வந்துட்டே. லவ் சீன்ஸ் நடிச்சுத்தானே ஆகணும்? பாய் ஃபிரண்ட்சோட சோஷியலா பழகற பொண்ணா இருந்தா இங்கே கூச்சமில்லாம இயல்பா நடிக்க முடியுமில்லையா? அதுக்காகக் கேட்டேன்."

"நான் அந்த ரகம் இல்லை சார். சினிமாலயும் டீசன்ட்டான சீன்லதான் நடிப்பேன்."

"லவ் பண்றது இன்டீசன்சி இல்லை தாயே? இப்ப நான்தான் கமல்னு வெச்சுக்கோ. எனக்கு ஜோடியாத்தானே இந்தப்படத்தில நடிக்கப் போறே? கமான். ஒரு ரொமான்ஸ் சீன்ல உன் ரியாக்ஷன் எப்படி இருக்குன்னு பார்க்கலாம். மாரியப்பா, நீ பாரு. நாங்க ரெண்டு பேரும் ஆக்ட் தர்றோம்."

மதியழகன் எழுந்து அவளருகில் உரசின படி அமர.. அவள் நகர்ந்து அமர்ந்தாள்.

"இல்லை சார். இதெல்லாம் வேணாம்."

"இப்ப டைரக்டர் வந்துடுவார் திலகா, அவர் இதே மாதிரி நடிச்சிக் காட்டச் சொல்லுவார். அதுக்கு முன்னாடி ஒரு ஒத்திகைப் பார்த்துக்க வேணாமா? கமான்." மதியழகன் அவள் தோளில் கை வைத்தான்.



நெளிந்தாள். "எனக்குப் பிடிக்கலை சார்."

"நாளைக்கு ஷூட்டிங்கல ஒவ்வொரு சீனும் உனக்குப் பிடிச்சிருக்கான்னு அபிப்பிராயம் கேட்டுக்கிட்டா ஷாட் வைக்க முடியும்?"

"இல்லை சார். இந்த ஒத்திகை எல்லாம் வேணாம்."

மதியழகன் சில விநாடிகள் அவளையே உற்றுப் பார்த்தான். "பூடகமாச் சொன்னா புரிஞ்சுக்க மாட்டியா? இவ்வளவு அசடா நீ? இல்லை அழுத்தமா? நாங்க ரெண்டு பேரும் தான் இந்தப் படத்துக்குப் புரொடியூசர்கன்னு உனக்குத் தெரியும். எங்களை அட்ஜஸ்ட் பண்ணிக்காம எப்படி நீ ஹீரோயினாகறது? கமான். டேக் இட் ஈசி திலகா" என்றவன் சட்டென்று அவளை மூர்க்கத் தனமாக அணைத்தான்!

அவள் கத்தினாள். தன்னைப் பிடுங்கிக் கொள்ள முயன்றாள். முந்தானை சரிந்தது. அவன் காலில் மிதிபட்டது. அவள் விலகி ஓட, சேலை அவள் உடம்பிலிருந்து விலகியது. பாவாடை ஜாக்கெட்டுடன் அறைமுழுக்க ஓடினாள்.

திடீரென்று ஒரு கதவைத் திறந்து கொண்டு பால்கனி போல இருந்த சிட் அவுட்டுக்கு ஓடி வந்தாள்.

அங்கும் அவன் வர..

திலகா யோசிக்கவே இல்லை. சிட் அவுட்டின் இடுப்புயர கைப்பிடிச் சுவற்றில் ஏறி

வெளியே தொபால் என்றுக் குதித்து விட்டாள்.

அந்த லாட்ஜுக்கு மாடிகள் மொத்தம் ஒன்பது!



## 11

அந்த அறையில் இன்ஸ்பெக்டர் நியூட்டனும், வெற்றிச் செல்வனும் மட்டுமே இருந்தார்கள்.

வெற்றிச் செல்வன் மிகவும் வியர்த்துப் போயிருந்தான்.

"நல்லா யோசிச்சுச் சொல்லுங்க சார். உங்களை போன்ல மிரட்டின அந்தக் குரலை இதுக்கு முன்னாடி எப்பவாவது கேட்டிருக்கிங்களா?"

"கேட்டதா நினைவு இல்லை சார். ஆனா பேசினது யாரா இருக்கும்னு என்னால யூகம் செய்ய முடியுது சார்."

"யாருன்னு சொல்லுங்க."

"சொல்றேன். சொல்றதுக்கு முன்னாடி என்னோட சில சந்தேகங்களுக்கு நீங்க பதில் சொல்லணும் சார்."

"என்ன?"

"பத்து வருஷத்துக்கு முன்னாடி நடந்து முடிஞ்ச ஒரு வழக்கோட உண்மையை இப்ப நான் உங்ககிட்ட சொல்றேன்னு வைங்க, மறுபடி என்மேல வழக்கு போடுவீங்களா?"

"என்ன சொல்றிங்க?" என்றார் அதிர்ந்து.



"உதாரணமா பத்து வருஷம் முன்னாடி நான் ஒரு பொருளைத் திருடிட்டேன்னு வழக்கு போலீஸ் போட்டதுன்னு வைங்க. அப்போ நான் திறமையான வக்கீல் வெச்சு, திருடினது நான் இல்லைன்னு வாதம் செஞ்சி, நீதிபதியும் என்னை விடுதலை பண்ணிட்டாரு. இப்போ அந்த திருட்டை நான் ஒத்துகிட்டா, மறுபடி என்மேல கேஸ் போடுவீங்களா?"

"குற்றத்தோட அளவைப் பொருத்தது அது. சின்ன திருட்டுன்னா விட்டுடலாம். வெளிநாட்டுக்கு உளவு வேலை பார்த்தது, கொலைன்னு பெரிய விஷயமா இருந்தா போலீஸ் தரப்புல மறுபடி வழக்கு போட வாய்ப்பிருக்கு. ஆனா இந்த மாதிரி விவகாரங்கள்ல நிறைய சட்ட சிக்கல்கள் இருக்கு. எதுக்குக் கேட்டிங்கன்னு சொல்லுங்க."

"சொல்றேன். எல்லா உண்மைகளையும் சொல்றேன். இப்போ எனக்கு என் மானம், மரியாதையை விட உயிர்தான் முக்கியமாப் படுது. தர்மராஜ் நிச்சயமா என்னைக் கொன்னுடுவான். அவனுக்குள்ளே அந்த வெறி இருக்கிறது ரொம்ப நேச்சுரல்."

"யாரு தர்மராஜ்?"

"திலகாவோட அண்ணன். விபரமா சொல்றேன் சார். பத்து வருஷம் முன்னாடி என்னோட பேரு மதியழகன். அதே மாதிரி சூர்யா சந்திரோட பேரு மாரியப்பன். நாங்க ரெண்டு பேரும் ஒரு சினிமா கம்பெனி வெச்சிருந்தோம். மலையாளத்தில சில படங்கள் டிஸ்டிரிபியூட் செஞ்சோம். ஆனால் நாங்களே படம் எடுத்ததா சொல்லிகிட்டுத் திரிஞ்சோம்.

தமிழ்ல படம் எடுக்கணும்னு ஒரு முயற்சி நிஜமாவே இருந்திச்சு. அதுக்கு திலகான்ற ஒரு காலேஜ் பொண்ணை கதாநாயகியா செலக்ட் செஞ்சோம். ஒரு பெரிய ஹோட்டல்ல ரூம் போட்டு அவளை அங்கே டைரக்டர் பார்க்கணும்னு பொய் சொல்லி அழைச்சிட்டுப் போனோம். அவளை அனுபவிக்க முயற்சி செஞ்சோம். அவ அட்ஜஸ்ட் பண்ற ரகமில்லை. போராடினா, நான்தான் கொஞ்சம் வெறித்தனமா துரத்தினேன். புடவை கையோட வந்துடுச்சு. பாவாடை, ஜாக்கெட்டோட இருந்த அவ நாங்க எதிர்பார்க்காத சமயத்தில சிட்-அவுட் கதவைத் திறந்து வெளியேப் போய் சட்டுன்னு குதிச்சுட்டா. ஒம்போது மாடிக் கட்டடம் அது. நாங்க இருந்த ரூம் ஒம்பதாவது மாடில. கீழே போய் மோதி சிதறி ஸ்பாட்லயே செத்துட்டா. நான் அவசரமா அவளோட புடவையை பால்கனி வழியாத் தூக்கிப் போட்டுட்டேன். கதவை மூடிட்டு நாங்க ரெண்டு பேரும் புறப்பட்டோம்."

"அப்புறம்?"

"ஆனா நான் புடவை தூக்கிப் போட்டதை ஒருத்தன் பார்த்துட்டான். அவன் எந்த பால்கனிலேர்ந்து வீசினான்னு கரெக்ட்டா சொன்னதாலே, அந்த ரூம் புக் செஞ்சிருந்த எங்களை போலீஸ் தேடி வந்து அரெஸ்ட் செஞ்சது. நாங்க ரூம் போட்டதை ஒத்துக்கிட்டோம். ஆனா எங்க ரூமுக்கு அவ வரலைன்னு சாதிச்சோம். திலகாவோட அண்ணன் எங்க கம்பெனி விசிட்டிங் கார்டு வீட்ல இருந்ததை போலீஸ்ல ஒப்படைச்சு, தன் தங்கை தன் எச்சரிக்கையையும் மீறி ஆர்வம் காட்டி செத்துப் போய்ட்டான்னு கதறினான். போலீஸ் எங்களை அரெஸ்ட் செஞ்சாலும் நாங்க கிரிமினல்ல கிங்கான லாயர் ராஜா ராமைப் பிடிச்சோம். அவர் உடனே எங்களை ஜாமின்ல கொண்டு வந்துட்டார். கேஸ் நடந்துச்சு."



"அப்புறம்?"

"லாயர் ராஜாராம் ரொம்ப பிரில்லியண்ட், கிரிமினல் லாயர், அவரோட ஒரே நோக்கம் தன்கிட்ட வர்ற எந்த கேசையும் ஜெயிக்கிறதுதான். கேசிலே நியாயம் இருக்கான்னு பார்க்க மாட்டார். அவர் எங்களைக் கூப்பிட்டு ஒரே ஒரு கேள்விதான் கேட்டார்."

"என்ன அது?"

"இந்த கேசை ஒண்ணுமில்லாம செஞ்சி உங்க ரெண்டு பேரையும் விடுதலை செய்ய வெச்சிட்டா எனக்கு எவ்வளவு தர முடியும் உங்களால்? இதான் கேள்வி. நாங்க எங்ககிட்ட இருந்த சொத்து, கார், பேங்க் பேலன்ஸ் எல்லாத்தையும் கணக்குப் போட்டு ஆளுக்கு அஞ்சி லட்சம் தர்றோம்னு சொன்னோம். கவலை விடுங்கன்னுட்டாரு. ரொம்ப திறமையா வாதாடினாரு. கீழேர்ந்து ஒம்பதாவது மாடி பால்கனியை சுட்டிக்காட்டின முக்கியமான சாட்சியை பிரமாதமா குழப்பினாரு. திலகா வேற ஏதோ காரணத்தால் தற்கொலை செஞ்சிருக்கலாம், அதுக்கும் இவங்களுக்கும் சம்பந்தமே இல்லைன்னு அட்டகாசமா பாய்ண்ட்டா வாதாடினார் ராஜாராம்"

"அப்புறம்?"

"நாங்க எதிர்பார்த்த மாதிரியே செஷன்ஸ்

கோர்ட் நீதிபதி, போலீஸ் இவர்கள் மேல் தொடர்ந்துள்ள வழக்கு சரிவர நிரூபிக்கப் படவில்லையென்பதால், சந்தேகத்தை இவர் களுக்குச் சாதகமாக்கி இரண்டு பேரையும் விடுதலை செய்கிறேன்னு தீர்ப்பு கொடுத்துட் டார். அன்னைக்கே பேசின பத்து லட்சத்தில் அட்வான்ஸ் கொடுத்தது போக பாக்கிப் பணத்தை செட்டில் பண்ணிட்டு கொஞ்ச நாளைக்கு இந்த ஊர்ல இருக்க வேணாம்னு முடிவு பண்ணி ரெண்டு பேரும் ஹைதராபாத் போயிட்டோம்."

"அப்புறம்?"

"நாங்க அங்கேப் போன மறுநாள் அந்த திலகாவோட அண்ணன் தர்மராஜ் வெறித் தனமா எங்க ரெண்டு பேரையும் நாங்க இருந்த இடத்துக்கெல்லாம் போய் தேடியிருக்கான். நாங்க கிடைக்காததால் ஆத்திரம் பூரா பணம் வாங்கிட்டு தன்னோட வாதத்திறமையை வெச்சு காப்பாத்தின வக்கில் ராஜாராம் மேலே திரும்பிருச்சி அவனுக்கு. நேரா கோர்ட் சேம்பருக்குப் போய் ராஜாராமை பதினாறு இடத்துல கத்தியால குத்தினான் தர்மராஜ். போலீஸ் பிடிச்சது. கேஸ் போட்டது. பத்து வருஷம் கடுங்காவல் தண்டனை கொடுத்தது. ஹைதராபாத் போன நாங்க பிரிஞ்சோம். நான் பிசினெஸ் துறையில இறங்கினேன். மாரி யப்பன்... ஐ மீன் சூர்யாசந்தர் தெலுங்கு படங்கள்ல சின்ன ரோல்கள்ல நடிக்க ஆரம்பிச்சான். அப்புறம் அவன் தமிழ்ல கிளிக் ஆகிய பெரிய ஸ்டாராகி மறுபடி மெட்ராஸ் வந்தான். அதே மாதிரியே எனக்கும் பிஸினெஸ் பிக்கப் ஆகி மெட்ராஸ்லேயே எக்ஸ்போர்ட்



பிசினெஸ்ல ஆபீஸ் போட்டு வளர்ந்தேன். இப்போ சூர்யாசந்தர் கொலை செய்யப் பட்டப்போ எனக்குள்ளே ஒரு உதறல் ஏற்பட்டுச்சி. எனக்கும் போன் பண்ணி அவன் பேசினதும் பயம் அதிகமாயிடுச்சி. அதனால தான் உங்களைக் கூப்புட்டு எல்லாம் சொல்லிட நினைச்சேன். ஜெயில்லேர்ந்து ரிலீஸ் ஆகி வந்து திட்டம் போட்டு சூர்யாசந்தரைக் கொன் னுட்டு, இப்ப எனக்கும் குறி வைச்சிருக்கிற தர்மராஜ்கிட்டேர்ந்து என்னைக் காப்பாத் துங்க ஸார். இப்ப நான் என்ன செய்யலாம்? எனக்கு பெங்களூர்ல ஒரு ஃப்ளாட் சொந்தமா இருக்கு. பெங்களூர் போறப்ப அங்கதான் போய் தங்குவேன். பேசாம நான் அங்கே போயிடறேனே. நீங்க தர்மராஜைப் பிடிச்சதும் தகவல் கொடுங்க. அதுக்கப்புறம் வர்றேன்" என்றான் வெற்றிச் செல்வன்.

நியூட்டன் பதில் எதுவும் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்தார். எழுந்து மெதுவாக நடந்தார். கைகளைப் பின்புறம் கட்டிய படி நடந்து திரும்பி, நடந்து யோசித்தார்.

"உங்களுக்கு போன்ல என்ன சொன் னான்? அதே வார்த்தைகளை அப்படியே சொல்ல முடியுமா?

"ஹலோ வெற்றி ஹியர்னேன். ஆனா இன்னைக்கு ஒரு அபாரமான தோல்வி இருங்குங்க உங்களுக்குன்னான். யார் நீங்க, என்ன வேணும்னேன். உங்க உயிர் வேணும், நீங்க கேட்டா தர மாட்டிங்க. நானா எடுத் துக்கப் போறேன். இன்னைக்கு உங்க வாழ்க்கை காலண்டர்ல கடைசித் தேதி! ஏதாச்சும் மிச்ச சொச்ச ஆசைகள் இருந்தா, இன்னைக்குள்ளே

நிறைவேத்திக்க முடிஞ்சா, கோ அஹெட்னான். 'வாட் நான்சென்ஸ்! யாரு நீ'ன்னு கேட்டேன். உன்னைக் கொலை செய்யப் போறவன். உன்னோட சம்பந்தப்பட்டவன்தான். உன்னால பாதிக்கப்பட்டவன்தான். வெச்சிடவா?'ன்னு கேட்டுட்டு வெச்சிட்டான். நான் சொன்ன தெல்லாம் அப்படியே அவன் சொன்னதுதான் சார்"

"ஐ ஸீ..." என்று மீண்டும் யோசித்தார், "வெற்றிச்செல்வன், இதுவரைக்கும் சூர்யா சந்தர் கேசில எழுபத்தி எட்டு பேரை தீவிரமா விசாரிச்சும் ஒரு திசை புரியமா தவிச்சிட்டு ருந்தோம். இப்போ நீங்க லட்டு மாதிரியான தகவலா இவன்தான் கொலைகாரன்னு அற்புதமா பொருந்தற காரணத்தோட திசை காட்டியிருக்கிங்க. உங்களுக்கு உடனடியா ஃபுல் போலிஸ் புரொட்டெக்‌ஷன் கொடுக்கறோம். கொடுத்துட்டு தர்மராஜை தேட ஆரம்பிக் கிறோம். ரொம் சுலபமா அவனைப் பிடிச் சிடலாம். நீங்க எந்த ஊருக்கும் போக வேணாம்"

"ஏன் சார், சூர்யாசந்தருக்கும் உங்க டிபார்ட்மெண்ட் பாதுகாப்பு கொடுத்ததே... அதை மீறிதானே அவன் செயல்பட்டான்!"

"அப்போ நிலைமையோட தீவிரத்தை சரியா கவணிக்கலை சார். அந்த போன் ஒரு குறும்பான ரசிகனோட விளையாட்டா இருக்கலாம்னு நினைச்சுதான் ஒரே ஒரு ஆபீசரை அனுப்பி வெச்சாங்க. இப்போ நிலைமை அப்படியா? ஏற்கனவே சவால் விட்டு கொலை செஞ்ச கொலைகாரன் மறுபடி சவால் விட்டிருக்கிறான். இந்த சூழ்நிலையில உங்க



ளுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுன்னா ஒரே ஒரு ஆபீசரையா அனுப்புவேன்? இருபது போலீஸ் காரங்க தர்றேன் சார். அத்தனை பேரும மஃப்டில இருப்பாங்க. ஆயுதத்தோட இருப் பாங்க. உங்க பக்கத்திலயே இருப்பாங்க. உங்களுக்கும் புல்லட் புரூஃப் ஜாக்கெட் தர்றேன். கவலைப்படாதீங்க."

ஆனாலும் கவலையோடு யோசிக்கத் துவங்கினான் வெற்றிச் செல்வன்.

"இல்லை சார். எனக்கு பயமா இருக்கு. நான் பெங்களூர் போயிடறேன்."

"பெங்களூர் போயிட்டா சரியாப் போச்சா? அவன் அங்கே வந்து கொல்ல மாட்டான்னு எப்படி நிச்சயம்?"

"எப்படி சார் அங்கே வருவான்? நான் யார்கிட்டேயும் சொல்லாம ரகசியமா புறப் பட்டுப் போனா?"

"சார், சூர்யாசந்தர் விஷயத்தை எடுத்துக் கங்க, அவன் அவரோட செயல்களை, நட மாட்டத்தை எல்லாம் ரொம்ப குளோஸா வாட்ச் பண்ணிதான் செயல்பட்டிருக்கான். ஈவினிங் டப்பிங் தியேட்டருக்கு சூர்யாசந்தர் வர்ற புரோக்ராமை முன்கூட்டியே தெரிஞ்சி வெச்சிருந்ததாலதான் பாத்ரூம் கிளின் பண்றவனா ஒரு வேஷம் போட்டுத் தயாரா வந்து உள்ளே நுழைஞ்சான். அந்த மாதிரி உங்களுக்கு இன்னைக்கு தேதி குறிச்சி சவால் விட்டு போன் செய்றான்னா அவன் உங்களை, உங்களோட நடவடிக்கைகளை ரொம்ப நல்லா கண்காணிச்சிட்டிருக்கான்னு அர்த்தம். நீங்க பெங்களூர் புறப்பட்டுப் போனாலும் உங்களை

மறைமுகமா கண்காணிச்சிட்டிருக்கிற அவன் தொடரலாம். அவன் தனக்கு உதவியா உங்களோட சம்பந்தப்பட்டவங்கள்ல சில பேரை விலைக்கு வாங்கியுமிருக்கலாம். அவன் தனியாளா செயல்படறானா இல்லை ஒரு டீம் அவனுக்கு உதவுதான்னும் தெரியாது. அதனால நீங்க இந்த ஊரை விட்டுப் போறதால மட்டும் இந்த மிரட்டலேர்ந்து தப்பிச்சிட முடியாது. அப்படியேப் போறதா இருந்தாலும் எங்களோட பாதுகாப்போடதான் போக வேண்டியிருக்கும். நீங்க தங்கற ஃப்ளாட்லயும் நாங்க முழு பாதுகாப்பு தரத்தான் வேணும்."

"அய்யோ! என்னை குழப்பறிங்களே..."

"எங்கே இருந்தாலும் எங்களோட பாதுகாப்பு அவசியம். எங்க இருந்தாலும் அவன் தேடி வருவான். அவனை இங்கேயே மடக்கிடலாம்னு சொல்றேன். இங்கேயே உங்களுக்கு முழுபாதுகாப்பு கொடுத்து அவனுக்கு வலைவிரிச்சி பிடிச்சிடலாம்னு சொல்றேன்."

"என்னமோ செய்யுங்க சார். என்னைக் காப்பாத்திடுங்க. இப்ப நான் என்ன செய்யணும்?"

"இன்னைக்கு ராத்திரி வரைக்கும் உங்களுக்கு என்ன புரோக்ராம்ஸ்?"

"ஈவினிங் நாலரை மணி வரைக்கும் ஆபிஸ், ஈவினிங் அஞ்சி மணிக்கு ஹோட்டல் தாஜ்ல பிசினெஸ் பீப்பிளை மீட் பண்றதா இருந்தேன். அதுக்கப்புறம் வீட்டுக்குப் போயி இன்னைக்கு என்னோட வெட்டிங் டேன்றதால ஒய்ஃபை கூட்டிக் கிட்டு பீச், ஹோட்டல் போகலாம்னு நினைச்சேன். அவ்வளவுதான்"



"தாஜ் ஹோட்டல் போறதையும் கேன்சல் பண்ணுங்க. ஒய்ஃபை வெளியே கூட்டிக் கிட்டுப் போறதையும் கேன்சல் பண்ணுங்க."

"சரி"

"உங்களுக்கு இப்படி ஒரு மிரட்டல் போன் வந்த விஷயம் உங்க மிசசுக்குத் தெரியுமா? போன் பண்ணிச் சொன்னிங்களா?"

"இல்லை! பதறிடுவா சார். சின்ன விஷயத்துக்கே பதறிப் போறவ"

"உங்க மிஸஸுக்கு எந்த ஊர்?"

"இதே ஊர்தான்"

"நல்லதாப் போச்சு. ஏதாச்சும் நியாயமான காரணம் சொல்லி அவங்களை அவங்க அம்மா வீட்டுக்கு அனுப்பி வைக்க முடியுமா?"

"ஏன் சார்?"

"உங்க வீட்ல முழு பாதுகாப்போட சில ஏற்பாடுகள் செய்யப் போறேன் சார். அவங்களுக்கு இந்த விஷயமே தெரிய வேணாமேன்னு பார்த்தேன்."

"அதுவும் சரிதான். அவளுக்குன்னு கார் இருக்கு. டிரைவ் பண்ணுவா. அம்மா வீடு கோட்டூர்புரத்திலதான். போகச் சொல்லிடலாம். ஆனா இன்னைக்கு கல்யாண நாள்னு சொன்னனே. ஈவினிங் வெளில கூட்டிட்டுப் போறதா வேற சொல்லியிருக்கேனே. இப்பப் போய் உன் அம்மா வீட்டுக்குப் போயிடுன்னு எப்படி சொல்றது? காரணம் சொல்ல வேணாமா? பிசினெஸ் பீப்பிள் வர்றாங்க, டிஸ்கஸ் பண்ணணும்னு சொல்ல முடியாது. அதுக்கு அவளை வீட்டை விட்டு அனுப்ப வேண்டிய அவசியமில்லையே."

மோவாயைத் தடவியபடி யோசித்த நியூட்டன் உடனே சொன்னார். “சார், உங்க வீட்ல இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் லேர்ந்து வந்து விடிய விடிய சோதனை போடப் போறாங்கன்னு தகவல் வந்திருக்கிறதா சொல்லுங்க. அவங்களை வீட்ல இருக்கிற நகைகள், பணத்தை எல்லாம் ஒரு சூட்கேஸ்ல போட்டு எடுத்துக் கிட்டு உடனே புறப்பட்டு அம்மா வீட்டுக்குப் போகச் சொல்லுங்க. நீங்களே மறுபடி நாளைக்கு போன் பண்ணி சொன்னப்புறம் வந்தால் போதும்னு சொல் லுங்க”

அவருடைய யோசனையை பிரமித்த வெற்றிச் செல்வனுக்கு இவர் தன்னைக் காப்பாற்றிவிடுவார் என்கிற நம்பிக்கை ஏற்படத் துவங்கியது.

டெலிபோன் ரிசிவரை எடுத்துவிட்டு எண்ணைச் சுழற்றத் துவங்கினான் வெற்றிச் செல்வன்.

## 12

மதியம் இரண்ட மணிக்கு நியூட்டனே வெற்றிச் செல்வனை அவனது அடையாறு பங்களாவுக்கு அழைத்து வந்தார். ஏற்கனவே கொடுக்கப்பட்ட உத்தரவின் பேரில் மஃப்டியில் இருபது போலீஸ்காரர்களும், யூனிபார்மில் பத்து பேரும், இரண்டு இன்ஸ்பெக்டர்களும் அந்த பங்களாவுக்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

வீட்டில் வேலை பார்க்கும் மூன்று



வேலைக்காரர்கள், ஒரு கூர்க்கா ஆகிய நால்வருக்கும் உடனே லீவு கொடுத்து அனுப்பி வைத்தார்.

வீட்டைச் சுற்றி ஆயுதமேந்திய எட்டு கான்ஸ்டபிள்களை நிறுத்தினார். மொட்டை மாடியில் இருவர். வீட்டுக்குள் சாதாரண உடையில் உள்ள கான்ஸ்டபிள்கள் பத்து பேரை அங்கங்கே நிறுத்தினார். மீதி பத்து பேர்களில் இரண்டு பேரை பங்களாவிற்கு எதிரே இருந்த டீக்கடையின் பெஞ்சில் உட்கார்ந்து அரட்டை அடித்தபடி கண்காணிக் கச் சொன்னார். ஒரு கான்ஸ்டபிள் அருகில் உள்ள பஸ் ஸ்டாப்பில் குருட்டுப் பிச்சைக் காரனாக மாற்றப்பட்டு நிறுத்தப்பட்டார். மற்றவர்களை சைக்கிளிலும் நடந்தும் அந்த தெருவிலேயே நடமாடச் சொன்னார்.

இரண்டு இன்ஸ்பெக்டர்களையும் அழைத்தார்.

“அஸ்வின், நீங்க எக்ஸ்டர்னல் ஃபோர் சுக்கு இன்சார்ஜ். மார்ட்டின் நீங்க வீட்டுக் குள்ளே வெற்றிச்செல்வன் பக்கத்திலேயே இருக்கணும். அவர் பாத்ரூம் போகணும்னு சொன்னாக்கூட நீங்க முதல்ல பாத்ரூமுக் குள்ளேப் போய்ப் பார்த்துட்டு அப்புறம்தான் அவரை உள்ளேப் போகச் சொல்லணும். வீட்டுக்கு வர்ற எந்த போன் காலையும் நீங்கதான் அட்டெண்ட் செய்யணும். வெற்றிச் செல்வன் ஊர்ல இல்லைன்னு சொல்லிடுங்க. வீட்டுக்குள்ளே பூக்காரி, எலெக்ட்ரிசிடி டிபார்ட்மெண்ட்லேர்ந்து மீட்டர் பார்க்க ணும்னு வர்றவன், தபால்காரன், தந்தி ஆளு, பேப்பர்காரன், சலவைக்காரன், டெலிபோன்

காரன்னு எவனா இருந்தாலும் சரி, காம் பௌண்ட் கேட்டோட நிறுத்தி திருப்பி யனுப்பப்படனும், எக்காரணத்தைக் கொண்டும் யாரையும் உள்ளே விடக்கூடாது. புரிஞ்சுதா?"

"யெஸ் சார்" என்றார்கள் இரண்டு பேரும்.

"நான் இப்போ நேரா சென்ட்ரல் ஜெயில் போறேன். விடுதலையான தர்மராஜைக் கண்டுபிடிக்கிறதில தீவிரமா இறங்கறேன்" என்ற நியூட்டன் வெற்றிச்செல்வன் அருகில் வந்தார்.

"சார், நீங்க உங்களோட இந்த ரூமை விட்டு எங்கேயும் நகர வேண்டாம். இந்த ரூமுக்குள்ளேயே ஒரு இன்ஸ்பெக்டர் இருப்பார். நீங்க புக் படிங்க. டிவி பாருங்க. வீடியோ, கேஸட் போட்டு படம் பாருங்க. தூங்குங்க. ஆனா யாருக்கும் நீங்களா போன் செஞ்சி பேச வேணாம். சாப்பாடு ஏற்பாடு செய்துட்டேன். உங்க ரூமுக்கே வரும். ஓக்கே?"

"கிட்டத்தட்ட என்னை ஹவுஸ் அரஸ்ட் பண்ணி வெச்சிருக்கிங்க!"

"குற்றவாளியை அரெஸ்ட் பண்றதுக்காக நான் மறுபடி ஈவினிங் ஆறு மணி சுமாருக்கு வர்றேன்."

நியூட்டன் புறப்பட்டார்.

***

மத்திய சிறைச்சாலை.

"யெஸ், பத்து வருஷம் சிறை தண்டனையை அனுபவிச்ச தர்மராஜை பதினைஞ்சு நாளைக்கு முன்னாடிதான் அவன் தண்டனைக் காலம் முடிஞ்சதாலே விடுதலை செஞ்சோம்"



என்றார் ஜெயிலர் பொன்னுசாமி. தலை கறுப்பாய் இருக்கு. மீசை மட்டும் முழுக்க வெளுத்திருந்தது.

"சார், எனக்கு அவனோட போட்டோ கிடைச்சா நல்லது. அப்புறம் அவனோட அட்ரெஸ் வேணும். ஜெயில்ல அவன் இருந்தப்போ அவனை அடிக்கடி வந்து பார்த்தவங்க விலாசம் வேணும்" என்றார் நியூட்டன்.

அரை மணி நேரமாயிற்று ரெக்கார்டு களைப் புரட்டி அவர் கேட்ட விபரங்களைக் கொடுப்பதற்கு.

மந்தைவெளி விலாசம் கொடுத்திருந்தான் தர்மராஜ்.

"இந்த வீடு அவன் சொந்த வீடா சார்?"

"ஆமாம். ரிலீசாகறப்போகூட கேட்டேன். இந்த வீட்லதான் தங்கப்போறியான்னு. அதுக்கு அவன் இப்போ இந்த வீட்ல வாடகைக்கு வைக்கப்பட்டவங்க இருக்காங்க. அவங்க காலி செஞ்சதும் முழு வீட்டையும் பயன்படுத் திக்குவேன்னு சொன்னான்."

அவனை அடிக்கடி வந்து பார்த்தது பார்த்திபன் என்கிற ஒரே ஒரு நண்பன்தான் என்று குறிப்பிட்டு அந்த பார்த்திபனின் மைலாப்பூர் விலாசம் தரப்பட்டிருந்தது.

தர்மராஜின் நேர்முக, இடமுக, வலமுக புகைப்படங்கள் தரப்பட்டன.

"நீங்க இங்கே ஜெயில்ல இருக்கிற ஒவ்வொரு கைதியோட நடவடிக்கைகளையும் கண்காணிப்பீங்க இல்லையா?" என்றார் நியூட்டன்.

"நிச்சயமா"

“ரிலீஸ் ஆகப் போறேங்கற எதிர்பார்ப்பு சமயங்களில அவனோட மனநிலை எப்படி இருந்திச்சுன்னு உங்களுக்குத் தெரியுமா?”

“நல்லாத் தெரியும். நான் இங்கே பதினேழு வருஷமா வேலை பார்க்கறேன். தர்மராஜ் இங்கே வந்து தன்னோட தண்டனையை ஆரம்பிச்ச நாள்லேர்ந்து எனக்குத் தெரியும். ஆரம்ப நாட்கள்ல அவன் ஒரு மிருகம் மாதிரிதான் இருந்தான். திடீர்னு கத்துவான். சாப்பாட்டைத் தூக்கியடிப்பான். வார்டரையே அடிப்பான். என்கிட்டே செமத்தியா அடி வாங்கியிருக்கான். போட்டு புரட்டியெடுத்திருக்கேன். என் தங்கச்சி சாவுக்கு காரணமாயிருந்தவங்களை கொலை செய்யணும்னு கத்துவான். பழி வெறியை அடக்குன்னு சொல்லிச் சொல்லியே அடிப்பேன். ரெண்டு வருஷத்துக்கு அவனால 'எல்லாருக்குமே தலைவலிதான். அப்போ ஜெயிலுக்குள்ளே கைதிகளுக்கு பதிமூணு நாளைக்கு ஒரு யோகா கிளாஸ் எடுத்தார் ஒரு யோகி. தியானம், அமைதி, வாழ்க்கையோட அர்த்தம்னு அவர் அற்புதமா எடுத்துச் சொன்ன வகுப்புகளை அட்டெண்ட் செஞ்சதிலேர்ந்துதான் அவன் மாற ஆரம்பிச்சான். பிடிவாதமும், முரட்டுத்தனமும் குறைஞ்சது. அமைதியானான். பேச்சைக் குறைச்சுக்கிட்டான். ஜெயிலுக்குள்ளேயே ஒரு லைப்ரரி வெச்சிருக்கோம். அதிலேர்ந்து தத்துவப் புத்தகங்களையும், ஆன்மீகப் புத்தகங்களையும் எடுத்துப் படிக்க ஆரம்பிச்சான். அதுக்கப்புறம் அவன் மேலே எங்களுக்கெல்லாம் ஒரு மரியாதை ஏற்படற மாதிரி நடந்துக்க ஆரம்பிச்சான். அவன் விடுதலையாகி



போனப்போ நிஜமா எனக்கு அவனைப் பிரியறது கஷ்டமா இருந்தது. ஆனா ராஸ்கல்! அத்தனையும் நடிப்புன்னு எங்களுக்குப் புரிய வைக்கலை. அடக்கி வெச்சிருந்த பழிவெறியை விடுதலை யானதுமே தாண்டவமாட விட்டுட்டான். இந்த ஜெயில் இப்போ மறுபடி அவனை சந்திக்கப் போகுதுன்றதில எனக்கு ரொம்ப வருத்தமாத்தான் இருக்கு” என்றார் பொன்னுசாமி.

அவரிடம் கை குலுக்கிப் புறப்பட்ட நியூட்டன் ஜீப்பில் நேராக அந்த மந்தைவெளி விலாசத்திற்கு வந்து சேர்ந்தார்.

கதவைத் திறந்த பெண்ணுக்கு நெளி நெளியாய் கூந்தல், அது லேசான ஈரத்துடன் இருந்தது. நெற்றியில் சந்தனம் இருந்தது. மணத்தது. “யாரனு?” என்றாள் மலையாளத்தில்.

“தர்மராஜ் இருக்காரா?”

“ரோங் அட்ரஸ் சாரே. இவிடே தர்ம ராஜீன்னு ஆரும் இல்லா”

“உங்க வீட்ல பெரியவங்க யார் இருக்காங்க?”

“அம்மே! இவிட வரு! போலீஸ் ஆபிசர் வந்து என்னை விசாரிக்கினு, எனிக்கு அர்த்த மாயில்லா”

சில விநாடிகளில் அந்தப் பெண் இருபது வருடம் கழித்துப் பார்த்தால் எப்படி இருப்பாளோ, அப்படி வந்தாள் அந்த நடுத்தர வயதுப் பெண்மணி.

நியூட்டன் வீட்டுக்குள் வந்து அவராக நாற்காலி இழுத்துப் போட்டுக் கொண்டு

அமர்ந்தார்.

"சாருக்கு என்ன வேணும்?" என்றாள் அவள்.

"இந்த வீட்டோட ஓனர் யாரு?" என்றார்.

"யாரோ தர்மாஜீன்னு சொன்னாங்க. நாங்க பார்த்ததில்லை ஸாரே"

"அந்த தர்மராஜீ எங்கே இருக்கார்னு தெரியுமா?"

"ஒரு கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போயிருக்கிறதா பக்கத்து வீடுகள்ல சொன்னாங்க. அது நிஜமோ, பொய்யோ குரு வாயூரப்பனுக்குத்தான் தெரியும்"

"உங்களை வாடகை பேசி குடி வெச்சது யாரு? யார்கிட்டே நீங்க வாடகை கொடுத்திட்டிருக்கிங்க?"

"ஆயாள் தர்மராஜீவிண்ட சிநேகிதன் பார்த்திபன்னு பேரு. மைலாப்பூர்ல இருக்கார். அவர் ஒரு வக்கீல். அட்ரஸ் வேணுமா?"

"என்கிட்ட இருக்கு. இந்த அட்ரஸ் தானான்னு பார்த்துச் சொல்லுங்க" என்று நியூட்டன் தன்னிடமிருந்த பார்த்திபனின் விலாசத்தைக் காட்ட, அந்தப் பெண் பார்த்து, "இதேதான். கரெக்ட் அட்ரஸ்தான் இது" என்றாள்.

"தர்மராஜ் பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி ஜெயில்லேர்ந்து விடுதலையாகி வெளில வந்தாச்சு. இது கேள்விப்பட்டிங்களா? யாராச்சும் சொன்னாங்களா?"

"இல்லை சார். தெரியாது?"

"தேங்ஸ்" என்று தன் விசிட்டிங் கார்டு



கொடுத்து, "ஒரு வேளை இனிமே தர்மராஜ் இங்கே வந்தா அவர் எங்கே தங்கியிருக்கார்னு சாதாரணமா விசாரிக்கிற மாதிரி விசாரிச்சுட்டு எனக்கு போன் பண்ணுங்க."

நியூட்டன் வெளியே வந்து பொது தொலைபேசிக்கு சென்று வெற்றிச்செல்வன் வீட்டிற்கு போன் செய்தார்.

"ஹலோ" என்றார் எதிர்முனையில் இன்ஸ்பெக்டர் மார்ட்டின்.

"மார்ட்டின், நான் நியூட்டன் பேசறேன். எவ்ரிதிங் ஓ.கே? ஒண்ணும் பிராப்ளம் இல்லையே?"

"இல்லை சார். ஒண்ணும் பிரச்சனை இல்லை. அவர் வீடியோ படம் பார்த்துட்டு இருக்கார்"

"நான் தர்மராஜை நோக்கி நெருங்கிட்டு இருக்கேன். அப்பப்போ போன் பண்றேன்" என்ற வைத்துவிட்டு ஜீப்பில் ஏறிப் புறப்பட்டார் நியூட்டன்.




பார்த்திபன் எக்மோர் கோர்ட்டில் இருப்பதாக அவர் ஆபீசில் குமாஸ்தா சொன்னதால் எக்மோர் கோர்ட்டுக்கு வந்தார் நியூட்டன். விசாரித்து பார்த்திபனை கோர்ட் வளாகத்தின் அருகில் இருந்த ஒரு ஹோட்டலில் பிடித்தார்.

கறுப்பு கவுன் அணிந்து யாரோ ஒருவ

ரிடம் கேஸ் பற்றி விவாதித்தபடி பார்த்திபன் சமோசா சாப்பிட்டுக் கொண்டிருக்க, அவருக்கு நேரெதிர் நாற்காலியில் சென்று அமர்ந்தார் நியூட்டன்.

பார்த்திபன் பேச்சை நிறுத்தி நிமிர்ந்து பார்க்க, கை நீட்டினார் நியூட்டன் புன்னகையுடன், "ஐம் இன்ஸ்பெக்டர் நியூட்டன். ஸ்பெஷல் கிரைம் பிராஞ்ச். நீங்கள்தானே லாயர் பார்த்திபன்?" என்றார்.

கைகுலுக்கி விடுவித்து, "ஆமாம்" என்றார். காதோரங்களில் லேசாக நரைக்கத் துவங்கியிருந்தது.

"கொஞ்சம் தனியாப் பேசணுமே"

"வக்கீல் சார், நான் உங்களை சாயங்காலமா ஆபீஸ்ல வந்து பார்க்கறேன்" என்றுச் சொல்லி அருகில் அமர்ந்திருந்தவன் எழுந்து சென்றான்.

"என்ன, சொல்லுங்க?"

"தர்மராஜ் இப்ப எங்கே இருக்கான்?"

"தெரியாது."

"ஐ மீன்... உங்க ஃபிரண்டு, பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி சென்ட்ரல் ஜெயில்லேர்ந்து விடுதலையாகி வந்த தர்மராஜ்! அவனோட வீட்டை நீங்கதான் பொறுப்பெடுத்துக்கிட்டு வாடகைக்கு விட்டிருக்கிங்க. ஜெயில்ல பல தடவைப் போய்ப் பார்த்திருக்கிங்க. அதனால தெரியாதுன்னு பதில் சொல்லாதீங்க. விடுதலையானதும் நேரா உங்களைத்தான் வந்து பார்த்திருக்கணும் அவன்."



"அதெல்லாம் கரெக்ட் சார். இப்ப எங்கேன்னுதானே நீங்க கேட்டிங்க. அதுக்குத் தான் தெரியாதுன்னு பதில் சொன்னேன்."

"நமக்குள்ளே நாடகம் வேணாம் சார். ஒரு குற்றவாளியை மறைக்கிறதும் ஒரு குற்றம்னு உங்களுக்குத் தெரியுமில்லையா?"

"இப்ப யார் யாரை மறைச்சாங்க? தர்மராஜ் விடுதலையாகறதுக்கு ஒரு நிமிஷம் முன்னாடி வரைக்கும்தான் குற்றவாளி. விடுதலையானதும் அவன் மறுபடி ஒரு சுதந்திர மனுஷன். ஏன் இப்பவும் அவனை குற்றவாளின்னு சொல்றிங்க?"

"சாமர்த்தியமா பேசறிங்களா? நடிகர் சூரியாசந்தர் கொலை செய்யப்பட்டது தெரியுமில்லையா?"

"ஆமாம், அதுக்கென்ன?"

"சூர்யாசந்தரை கொன்னது விடுதலையாகி வந்த தர்மராஜ். அதே மாதிரி தொழிலதிபர் வெற்றிச் செல்வனை கொலை செய்யப் போறதா இன்னைக்கு போன்ல மிரட்டியிருக்கிறதும் தர்மராஜ்."

"நல்ல கற்பனை வளம் இருக்கு சார் உங்களுக்கு. சூர்யா சந்தரும், வெற்றிச்செல்வனும் பத்து வருஷம் முன்னாடி மாரியப்பனும் மதியழகனுமா இருந்தப்போதான் தர்மராஜுக்கு எதிரிகள். அவங்களை தர்மராஜ் கொலை செய்யத் துடிச்சதும், அவங்களைத் தேடிய லைஞ்சதும் உண்மை. ராஜாராம் வக்கீல் பத்து லட்சம் வாங்கிட்டு திறமையா வாதாடி அவங்களை கோர்ட்ல விடுதலை செய்ய வெச்சாரே, அந்த தகவலை தர்மராஜ்கிட்ட

சொன்னதே நான்தான். நான் அப்போ ராஜாராம்கிட்ட ஜூனியரா இருந்தேன். ஒரு பொய் கேசுக்கு வாதாடாதிங்கன்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவ்வளவு தான் என்னால முடிஞ்சது. அவங்க ரெண்டு பேரும் கிடைக்காத ஆத்திரத்தில எங்க சீனியர் ராஜாராமை வெறியோட குத்திக் கொன்னுட்டு தர்மராஜ் ஜெயிலுக்குப் போனப்புறமும் பழி வெறி இருந்தது உண்மை. ஆனா பத்து வருஷ இடைவெளில தர்மராஜ் மனசு எவ்வளவோ பக்குவப்பட்டு அவன் கேரக்டரே மாறிடுச்சு. புத்தி ஆன்மீகப் பாதையில போயிடுச்சு. தர்மராஜ் வந்தான். வந்து தன் வீட்டை அனாதை இல்லத்துக்கு சேரணும்னு உயிர் எழுதச் சொன்னான். நானும் அவனோட வற்புறுத்தலுக்கா உயில் எழுதித் தந்தேன். அதைப் பதிவு செஞ்சான். வடக்குப் பக்கம் ஏதாச்சும் ஒரு சாமியார் மடத்திலே சேர்ந்து ஆன்மீக சேவை செய்யப் போறேன், நான் எங்கேப் போறேன்னு எனக்கேத் தெரியாதுன்னு சொல்லிட்டுப் போயிட்டான்"

"இதுவும் அவனோட பிளான். தான் திருந்திட்ட மாதிரி உங்ககிட்ட வேஷம் போட்டுட்டு இதே ஊர்ல வேற எங்கேயோ ஒளிஞ்சிருந்து தன்னோட பழிவெறியை தனிச்சுக்கிற நடவடிக்கைகள்ல அவன் இறங்கியிருக்கலாமில்லையா?"

"சந்தேகப்படறதுக்குன்னே பிறப்பெடுத்தவங்க போலீஸ் காரங்க. தாராளமா சந்தேகப் படுங்க. உண்மைன்யா நான் சொல்லிட்டேன். இன்னும் உங்க சந்தேகம்தான் உண்மைன்னு சொன்னா ஆதாரத்தோட நிருபிச்சுப் பேசுங்



கன்னுதான் நான் சொல்ல வேண்டி வரும்"

சிரித்தார் நியூட்டன். எழுந்தார்.

"அந்த உயில் பிரதி எனக்குக் காட்ட முடியுமில்லையா?"

"என் ஆபீஸ்ல இருக்கு. இப்பவே போலாமா?"

"வேணாம். நான் கேக்கறப்ப காட்டினால் போதும்" என்று நகர்ந்த நியூட்டன். "மறுபடி சந்திக்கலாம். ஒரு விஷயம் தந்திரமான யோசனைகளும் சாமர்த்தியமும் வக்கீல்களுக்கு மட்டும் சொந்தமானதில்லைன்னு கூடிய சீக்கிரம் புரிஞ்சுக்குவிங்க சார். வர்றேன்."

நடந்தார் நியூட்டன்.

இந்த வக்கில் பார்த்திபனுக்கு நிச்சயமாக தர்மராஜ் இப்போது இருக்கும் இடம் தெரியும். ஒருவேளை நடந்த கொலைக்கும், கொலை மிரட்டலுக்கும் இவனேக்கூட திட்டம் போட்டுக் கொடுத்திருக்கலாம்.

யோசனையோடு ஜீப்பில் ஏறினார் நியூட்டன்.



## 14

நேராகத் தன் அலுவலகம் வந்த நியூட்டன் முதல் வேலையாக வக்கில் பார்த்திபனை ரகசியமாக கண்காணிக்க மூன்று பேரை நியமித்து அனுப்பி வைத்தார். அவருக்கு வருகிற டெலிபோன்களை பதிவு செய்ய எக்ஸ்சேஞ்ச் மூலமாக ஏற்பாடு செய்தார்.

தர்மராஜின் புகைப்படத்தை பிரதிகள் எடுத்து சிடி லிமிட்டில் எல்லா ஸ்டேஷன்களுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்தார். செக் போஸ்ட்ஸ், டிராஃபிக் டிவிஷன், ஏர்போர்ட், ரயில்வே ஸ்டேஷன்ஸ் எங்கும் தர்மராஜை கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்தார்.

இன்னொரு டீமை புகைப்படப் பிரதிகளுடன் சிடியில் உள்ள எல்லா லாட்ஜ்களுக்கும் போய் தேடச் சொன்னார்.

சப் - இன்ஸ்பெக்டர் ஒருவரை அழைத்து, "பத்து வருஷம் முன்னாடி திலகாவை கற்பழிக்க முயற்சி செஞ்சி இறுதில சாவுக்குக் காரணமா இருந்ததா மதியழகன், மாரியப்பன் மேல போடப்பட்ட வழக்கு சம்மந்தமா அந்த சமயம் பத்திரிகைகள்ல வந்த அத்தனை செய்திகளும் வேணும். லைப்ரரிக்குப் போய் கலெக்ட் பண்ணி எத்தனை நேரமா இருந்தாலும் என்கிட்டே கொடுங்க" என்றார்.

இரவு எட்டு மணிக்கு வெற்றிச்செல்வனின் பங்களாவுக்கு வந்து சேர்ந்தார்.

பங்களாவுக்கு வெளியே இருந்த இன்ஸ்பெக்டர் அஸ்வின் எந்தப் பிரச்சனையும் இல்லை என்றார். உள்ளே வந்தார். தனியறையில் இருந்த இன்ஸ்பெக்டர் மார்ட் டின் எழுந்து கொண்டார். படம் பார்த்துக் கொண்டிருந்த வெற்றிச்செல்வன் ரிமோட் மூலம் அதை அணைத்தான்.

பெருமூச்சுடன் நாற்காலியில் அமர்ந்தார் நியூட்டன்.

"என்ன சார், தர்மராஜைப் பிடிச்சிட்டிங்களா?"



"அதுக்கான அத்தனை ஏற்பாடுகளையும் செஞ்ச வச்சிட்டு வந்திருக்கேன். எந்த நிமிஷமும் அவன் பிடிப்பட்ட செய்தி நமக்கு வரலாம்" என்ற நியூட்டன் தான் மேற்கொண்ட விசாரணைகளையும், நடவடிக்கைகளையும் சுருக்கமாகச் சொன்னார்.

"கொலைகாரன் சாமியாரகறது இந்த கலியுகத்தில நடக்கிற காரியமில்லை சார்" என்றார் மார்ட்டின்.

"எதுக்கும் இருக்கட்டும்னு தர்மராஜோட போட்டோ பிரிண்ட்சை வடக்கே காசி, ரிஷிகேஷ், ஹரிதுவார் சைடுல உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அனுப்பி வைக்கச் சொல்லியிருக்கேன்"

"அவன் இங்கதான் சார் · எங்கேயோ பதுங்கியிருப்பான். நீங்க சொல்றதை வெச்சுப் பார்த்தா, அந்த வக்கீல் பேசின தோரணையே சரியில்லையே. அவரு தர்மராஜுக்கு பிளான் போட்டுத் தந்திருப்பாரோன்னு நினைக்கத் தோணுது"

"எனக்கும் அந்த சந்தேகம் ஏற்பட்டதால தான் வக்கிலை ரொம்பத் தீவிரமா கண்காணிக்க ஏற்பாடு செஞ்சிருக்கேன்"

தர்மராஜைப் பிடிப்பதற்கு மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அவர் காபி பருகியபடி ரொம்ப நேரம் பேசினார்கள்.

இரவு மணி ஒன்பதரைக்கு நியூட்டன் எழுந்தார்.

"வெற்றிச்செல்வன், இப்போ உங்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கிற பாதுகாப்பு ஏற்பாடு ரொம்ப கரெக்டா இருக்கு. இதே செட்டப்

தொடரட்டும் நீங்க நிம்மதியா தூங்குங்க. நான் காலைல வர்றேன்"

"சரி சார்" என்றான் வெற்றிச்செல்வன்.

நியூட்டன் நடக்கத் துவங்கியபோது, டெலிபோன் ஒலித்ததால் நின்றார். மார்ட்டின் எடுத்துப் பேசுவதை கவனித்தார்.

"யெஸ், இருக்கார். நீங்க யாரு? சரி, இருங்க, பேசச் சொல்றேன்" என்று பேசிய மார்ட்டின் ரிசீவரின் வாய்பொத்தி, "சார், தான் யாருன்னு சொல்ல மாட்டேங்கறான். ஆனா உங்க பேர் சொல்லிக் கேக்கறான். உங்க கிட்டதான் பேசணுமாம்" என்றார்.

நியூட்டன் ரிசிவரை வாங்கிக் கொண்டு "ஹலோ, நியூட்டன் ஹியர்" என்றார். அந்த டெலிபோனுடன் இணைக்கப்பட்டிருந்த டேப்ரெக்கார்டரில் நாடா சுழலத் துவங்கியது.

"வணக்கம் சார்" என்றது கரகரப்பான குரல், "ஆச்சரியமா இருக்கும். ஊர் உலகம் முழுக்க நீங்க தேடிக்கிட்டிருக்கிற தர்மராஜ் தான் பேசறேன்."

அதிர்ந்து போனார் நியூட்டன்.

"சார், பாதிக்கப்பட்டவனுக்குத்தான் வேதனை புரியும். உங்களுக்கு ஒரே ஒரு பாசமான தங்கச்சி இருந்து, அவளோட எதிர்காலம் பத்தி நீங்க பல விதமா திட்டம் போட்டுக்கிட்டிருக்கிறப்ப ஒன்பதாவது மாடியிலேர்ந்து அலங்கோலமா குதிச்சு மண்டை சிதறி செத்தா.. உங்க மனநிலை எப்படி இருக்கும்னு இப்ப உங்களால யூகத்தில சொல்ல முடியாது சார். நிஜமா ஒரு சம்பவம் நடக்கறப்பத்தான் அதோட நிஜமான பாதிப்பை



உணர முடியும். அவ சாகறதுக்குக் காரணமா இருந்தவங்க சூர்யாசந்தரும், வெற்றிச் செல்வனும். ஆனா அவங்களை உங்க சட்டம் தண்டிக்கலை. தப்பு செஞ்சவங்களுக்கு விடுதலை வாங்கித் தந்த பண வெறிபுடிச்ச அதுக்காக புத்தியை, திறமையை அடகு வெச்ச வக்கிலை நான் ஆத்திரம் தீர குத்திட்டு உள்ளேப் போனேன். ஆனாலும் என் ஆத்திரம் அடங்கலை. என் மனசுல உள்ள வெறி அடங்க பத்து வருஷம் இல்லை, பத்து ஜென்மம்கூடப் பத்தாது சார். எப்படா ரிலீசாவேன்னு காத்திருந்தேன். ரிலீசானதும் நான் தீர்த்துக்கட்ட நினைச்சது மூணு பேரை, ஒரு வேலை முடிஞ்சது. ரெண்டாவது வேலையில நீங்க ஒரு பெரிய முட்டுக் கட்டையா வந்து உக்காந்துட்டிங்க. ஒரு சாதாரண ஆளுக்கு இவ்வளவு பெரிய பாதுகாப்பு தருவீங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. நானும் ரெண்டு மூணு ட்ரிப் யூஸ் பண்ணிப் பார்த்தேன். வெற்றிச் செல்வனோட பங்களாவுக்குள்ளே எந்த வகையிலயும் நுழைய முடியலை. உங்களோட திறமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக நான் பாராட்டறேன். ஆனா இதே மாதிரி எத்தனை நாளைக்கு சார் உங்களால தொடர்ந்து அவனுக்கு பாதுகாப்பு தரமுடியும்? ஆயுசு முழுக்கவா? பார்க்கலாம். நீங்க தொடர்ந்து அவனை பாதுகாத்துக் கிட்டே இருங்க. நான் பாக்கி இருக்கிற மூணாவது ஆளை முடிச்சிட்டு வந்துடறேன். கடைசியா வெற்றிச்செல்வனை வெச்சிக் கிறேன். கொஞ்சம் ஆர்டர் மாறுது. அவ்வளவுதான். எப்படியும் இன்னைக்குத்

தேதியில திட்டமிட்டபடி கொலை உண்டு சார். வெச்சிடவா?"

"ஹலோ... ஹலோ..." என்றார் நியூட்டன்.

எதிர்முனை வைக்கப்பட்டது.

போன் விபரங்களைச் சொல்லி, "என்னங்க வெற்றிச்செல்வன், நீங்க ரெண்டு பேர்தானே .திலகாவை கற்பழிக்க முயற்சி பண்ணிங்க. மூணாவது ஆளை தீர்த்துடறேன் இன்னைக்குன்னு சொல்றானே... யார் அந்த மூணாவது ஆளு?" என்று பரபரத்தார்.

"தெரியலையே சார். சம்பந்தப்பட்டது நாங்க ரெண்டே பேர்தான் சார்"

"நல்லா யோசிச்சுப் பாருங்க"

"ஒருவேளை திலகாவை எங்ககிட்ட அழைச்சுட்ட வந்த பி.ஆர்.ஓ. அய்யாத்துரையையும் அவன் தன்னோட லிஸ்ட்ல வெச்சிருக்கானோ?"

"இருக்கலாம். அய்யாத்துரை இப்ப எங்க இருக்கார்னு தெரியுமா?"

"எங்க இருந்தாலும் அவரைக் கொலை செய்ய முடியாது சார். ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அவர் செத்துப் போய்ட்டார். ஹார்ட் - அட்டாக்ல. நான் போய் மாலை போட்டுட்டு வந்தேன்."

"வேற யாரு அப்போ?"

இன்ஸ்பெக்டர் அஸ்வின் ஒரு கவருடன் உள்ளே வந்து, "சார், திலகா கேஸ் பத்தி அந்த சமயத்தில பத்திரிகைகள்ல வந்த செய்தியை எல்லாம் சேகரிக்கச் சொல்லிருந்திங்களாம்.



எஸ்.ஐ.தனபால் கொண்டாந்தார். இந்தாங்க" என்று கொடுத்தார்.

நியூட்டன் அந்த பழைய செய்தித்தாள்களின் ஜெராக்ஸ் பிரதிகளை எடுத்து கட்டிலின் மேல் பரப்பி வைத்து அவசர அவசரமாகப் படித்தார்.

அவர் படித்த செய்திகளில் ஒரு செய்தி அவரைக் கவர்ந்தது.

'தனது தங்கையின் மரண வழக்கில் தனக்கு நீதி கிடைக்க வில்லை என்பதால் ஆத்திரமடைந்த தர்மராஜ் என்னும் வாலிபர் தன் தங்கையின் மரணத்திற்குக் காரணமாயிருந்தவர்களை விடுதலை செய்து தீர்பெழுதிய நீதிபதி குருமூர்த்தி அவர்களின் கார் கண்ணாடிகளை அடித்து நொறுக்கிவிட்டு கோர்ட் சேம்பருக்குள் நுழைந்து சாமர்த்தியமாக வாதம் செய்து விடுதலை வாங்கிக் கொடுத்த பிரபல கிரைம் வக்கீல் ராஜாராமின்மீது பாய்ந்தார். தான் கொண்டு வந்திருந்த கத்தியால் வக்கீலை சதக், சதக் என்று பதினாறு இடங்களில் குத்தினார்.'

அந்த செய்தியை மார்ட்டினிடம் காட்டிய நியூட்டன், "இதோ பாருங்க, வாதாடின வக்கீல் மேல மட்டுமில்லை, தீர்ப்பு கொடுத்த நீதிபதி மேலயும் அவனுக்கு ஆத்திரம் இருந்திருக்கு. அதனாலதான் நீதிபதியோட கார் கண்ணாடியை உடைச்சிருக்கான். அவன் இப்ப போன்ல குறிப்பிட்ட மூணாவது நபர் இந்த நீதிபதியாக் கூட இருக்கலாம். நமக்குத் தோன்றிய சந்தேகத்தை அலட்சியப்படுத்திட முடியாது. உடனே இந்த நீதிபதி இப்ப எங்கே இருக்காருன்னு விசாரிங்க. பத்திரமா இருக்கச்

சொல்லி அலர்ட் செஞ்சுடலாம். உடனே இவருக்கு பாதுகாப்பு ஏற்பாடும் செய்யணும், அட்ரஸ் கிடைச்சதும் நானே நேர்ல போறேன். உடனே விசாரிங்க. குவிக்!" என்றார்.

இன்ஸ்பெக்டர் மார்ட்டின் போனை எடுத்து பலருடன் பேசி கடைசியாக நீதிபதி குருமூர்த்தியின் போன் நம்பரைப் பிடித்தார். அந்த நம்பரை டயல் செய்துவிட்டு, "ரிங் போகுது, நீங்களேப் பேசுங்க சார்" என்று ரிசீவரை நியூட்டனிடம் கொடுத்தார்.

நியூட்டன் வாங்கிக் காத்திருந்தார்.

"ஹலோ" என்று குரல் வந்தது.

"ஜட்ஜ் அய்யா குருமூர்த்தி சார் வீடு தானே?"

"ஆமாங்க."

"அய்யா இருக்காங்களா?"

"தூங்கறாருங்களே"

"நீங்க யாரு?"

"இந்த வீட்ல வேலை பார்க்கறேங்க"

"ஒரு முக்கியமான விஷயம். நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் பேசறேன். கொஞ்சம் அய்யாவை எழுப்பிப் பேசச் சொல்லுங்க."

"கொஞ்சம் இருங்க"

சில வினாடிகள் கழித்து, தூக்கக் கலக்கமாக, ஆனால் கம்பீர மான குரலில், "ஹலோவ், குருமூர்த்தி ஸ்பீக்கிங்" என்றார் நீதிபதி.

"குட் ஈவினிங் சார். நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் நியூட்டன். பத்து வருஷம்



கன்சாக்ஷன் கொடுத்திருக்கிங்க. வக்கீல் ராஜாராமை கொன்னதுக்காக. அவனோட தங்கை திலகாவோட கொலை கேசுக்கும் நீங்கதான் தீர்ப்பு கொடுத்திங்க"

"யெஸ், ஐ ரிமெம்பர், சொல்லுங்க. என்ன இப்போ?"

"அந்த தர்மராஜ் அப்போ தீர்ப்பு சரியில்லைன்னு உங்க கார் கண்ணாடியெல்லாம் உடைச்சானில்லையா, இப்போ பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி விடுதலையாகி வந்துட்ட அவன் ஒரு கொலை செஞ்சட்டார் சார்."

"ஈஸிட்?"

"ஆமாம். டாக்டர் சூர்யாசந்தர் அவனுக்குப் பகையாளி.. தொழிலதிபர் வெற்றிச் செல்வன் இன்னொரு பகையாளி. வெற்றிச் செல்வனை இன்னைக்குள்ளே கொலை பண்ணிடுவேன்னு அவன் போன்ல மிரட்டினதால நாங்க அவருக்கு ஃபுல் புரொட்டெக்ஷன் கொடுத்திருக்கோம். இப்ப நான் அவர் வீட்லேர்ந்துதான் பேசறேன். இந்த கேசுல ஒரு திடீர் திருப்பம். ஊர் பூரா அந்த தர்மராஜை நாங்க தேடிட்டிருக்கிற இந்த சமயத்தில அவனே கொஞ்சம் முன்னாடி போன் பண்ணி என்கிட்டேயே பேசினான். அவன் விடுதலையாகி வந்ததும் கொலை செய்ய நினைச்சது மூணு பேரைன்னு சொன்னான். நான் வெற்றிச்செல்வனுக்கு இரும்புத் திரைமாதிரி சரியான பாதுகாப்பு கொடுத்துட்டதால இன்னைக்கு மூணாவது நபரை கொன்னுட்டு அப்புறமா அவரைப் பார்த்துக்கறேன்னு சவால்

மாதிரி பேசிட்டு வெச்சுட்டான். அவன் கொல்லத் துடிக்கிற மூணாவது நபர் யாருன்னு எங்களுக்குப் புரியலை. தர்மராஜுக்கு உங்க மேலயும் ஆத்திரம் இருந்ததால் உங்களையும் தகவல் சொல்லி எச்சரிச்சு வைக்கலாம்னு நினைச்சுதான் போன் செஞ்சோம் சார்."

"வாட் நான்சென்ஸ்! ஐ ம் எ ரிட்டையர்ட் பர்சன் நவ். நான் இப்போ ஜட்ஜ் இல்லை. என்னைப் போயி வொய்? நோ! அந்த மாதிரி எல்லாம் எதுவும் நடக்காது."

"இல்லை சார். எங்களுக்கு இன்னாரைத் தான் அவன் குறி வெச்சிருக்கான்னு உறுதியாத் தெரியாததால சொல்லி வெச்சிடறது நல்லதுன்னு நினைக்கிறோம்."

"எனிவே, தேங்க் யூ ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன்"

"உங்க வீட்டு அட்ரஸ் வேணும் சார். நான் நேர்ல வர்றேன். உங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய விரும்பறேன்."

"அதெல்லாம் எதுவும் வேணாம் சார். நானும் என் வைஃப்பும் இங்கே ஊருக்கு வெளில வேளச்சேரி ரோட்ல உக்காந்திருக்கோம். கவுண்டிங் அவர் லாஸ்ட் டேஸ். என்னைப் போயி எதுக்காக கொல்லப் போறான்? எனக்கு வயது அறுபத்தி அஞ்சி சார். ஒரு தடவை ஹார்ட் அட்டாக் வந்தாச்சு. எனி மொமண்ட் மாஸிவ் அட்டாக் வரலாம். எனக்குப் போயி பாதுகாப்பு ஏற்பாடு அது, இதுன்னு செஞ்சி அரசாங்க பணத்தை வேஸ்ட் செய்யறதோட, நான் இருக்கிற ஏரியால டிராமா பண்ணி என்னை பபூன் ஆக்கி



விட்டுடாதீங்க. நீங்க சொல்ற ஆளு என்னைத் தேடி எல்லாம் வரமாட்டான்."

"ரைட் சார், எதுக்கும் அட்ரஸ் சொல்லுங்களேன்."

"குறிச்சுக்கங்க"

சொல்லப்பட்டது. குறிக்கப்பட்டது.

"வேறென்ன சார்? யாரோ கதவைத் தட்றாங்க. வெச்சிடவா?"

"வைக்காதீங்க சார். அது யாருன்னு வேலைக்காரனை விட்டுப் பார்க்கச் சொல்லுங்க. ப்ளீஸ்... வி ஆர் க்யூரியஸ் அபவுட் இட்."

"இருங்க, டேய், விகவம், கதவைத் தட்டறாங்க, யாருன்னு பாரு"

காத்திருந்தார் நியூட்டன்.

"அய்யோ!" என்று வேலைக்காரன் அலறும் சத்தம் கேட்டது. தொடர்ந்து, "என்ன ஜட்ஜ் அய்யா, யாரு? போலீஸ் உங்களுக்கு பத்திரமா இருக்கச் சொல்லி தகவல் தருதா? ஞாபகம் இல்லையா? நான்தான் தர்மராஜ். பத்து வருஷம் உள்ளேத் தள்ளினீங்களே... நியாயமான்னு கேட்டுட்டுப் போகத்தான் வந்தேன்" என்று தர்மராஜின் குரல் கேட்டது. தொடர்ந்து, "கொடுங்க அய்யா, நானே பேசறேன்" என்றதற்குப் பின், நேரடியாக தர்மராஜ் பேசினான்.

"யாரு போலீஸ்தானே?"

"நியூட்டன் பேசறேன். இதபாரு தர்மராஜ். அங்கே நீ எதுவும் செஞ்சுடாதே! சொல்றதைக் கேளு."

"நான் எதுவுமே செய்யலை. ஆனா

பாருங்க ஜட்ஜ் அய்யாவுக்கு உடம்பு பூரா வேர்த்துடுச்சு. கை, கால் எல்லாம் நடுங்குது. நடுக்கத்தை ஒரேடியா நிறுத்திட்டு அப்புறம் உங்ககிட்ட பேசறேன்”

தொடர்பு துண்டிக்கப்பட்டதும், “ராஸ் கல்” என்றுக் கத்தினார் நியூட்டன். வெறித் தனமாக தன் ஜீப்புக்கு ஓடினார்.




நியூட்டன் விரைந்து வேளச்சேரிக்கு வந்து விலாசம் தேடி ஜட்ஜ் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது...

குருமூர்த்தி கட்டிலில் மயக்கமாகப் படுத் திருக்க, தலையில் கட்டுபோட்ட வேலைக் காரன் அவர் அருகில் கவலையோடு நின்றிருந் தான்.

“டாக்டர் ஊசி போட்ருக்கார். இப்படி வாங்க” என்று வெளியே ஹாலுக்கு அழைத்து வந்த வேலைக்காரன், “நான் யாருன்னு கேட்டுகிட்டே கதவைத் திறந்தேன், தலையில லொட்டுன்னு கட்டையால போட்டான் வந்தவன். நான் கத்திக்கிட்டு கீழே விழுந்ததும் அவன் அய்யாகிட்டேர்ந்து போனைப் பிடுங்கிப் பேசினான். அந்த நேரத்துக்குள்ளே அய்யா ஒரு காரியம் செஞ்சாரு. நைசா மேஜை டிராயருக்குள்ளே கை விட்டு அவரோட கைத்துப் பாக்கிய்ய எடுத்துட்டாரு, அவன் போனை வெச்சிட்டுத் திரும்பிப் பார்த்தவன் அரண்டு போயிட்டான். அவரு துப்பாக்கி



எடுப்பாருன்னு எதிர்பார்க்கவே இல்லை. ‘மரியாதையா நீயே போலீசுக்கு போன் பண்ணுடா’ன்னு அய்யா மிரட்டினாரு. அவன் திடுதிப்புன்னு வாசல் பக்கம் ஓடியேப் போய்ட்டான். ஆனாலும் இந்த திடீர் சம்பவத்தால பதறிப்போன அய்யா மயக்கமா வருதுன்னு உக்கார்ந்துட்டாரு. நான் பக்கத்தில இருக்கிற டாக்டர்கிட்ட ஓடினேன். அவர் வந்து பார்த்துட்டு தூங்கறதுக்கு ஊசி போட்டுட்டு எனக்கு கட்டு போட்டுவிட்டுட்டுப்போனாரு. பயமா இருக்கு சார். மறுபடி அந்தக் கொலைகாரப் பாவி வந்துடுவானோன்னு திடுக்கிடுக்குன்னு நெஞ்சு அடிச்சுக்குது” என்றான்.

“கவலைப்படாதே, இங்கே அசம்பா விதமான எதுவும் நடக்காதது எனக்கு ரொம்ப ஆறுதலா இருக்கு. உடனே நான் பாதுகாப்புக்கு ஏற்பாடு பண்றேன். அவன் எங்கேயும் தப்பி ஓட முடியாது. நாளைக்குள்ளே பிடிச்சிடுவோம். ஆமாம், அய்யாவோட சம்சாரம் எங்கே?”

“அவங்க இறந்துதான் ஒரு வருஷமாச்சே. அதோ பாருங்க” என்று சுவரில் மாலை போடப்பட்ட புகைப்படத்தில் இருந்த அம்மையாரைக் காட்டினான்.

“போன்ல நானும் என் வைஃப்பும் இருக்கோம்னு சொன்னாரே”

“அப்படித்தான் யார்கிட்டேயும் சொல் வாரு. அம்மா இறந்துட்டதா சொல்லவே மாட்டாரு, பொண்டாட்டி மேல ரொம்ப பாசம். அவங்க ஒம்போது வருஷம் வாதத்துல அவஸ்தைபட்டு படுத்த படுக்கையா கிடந்து

போன வருஷம் செத்துப் போனாங்க. அய்யா வால தாங்கவே முடியலை."

"விஸ்வம்!" அறைக்குள்ளிருந்து குரல் வந்தது.

"முழிச்சுட்டார் போலிருக்கு. நான் பேசறேன்" என்று நியூட்டன் உள்ளே வந்தார். படுக்கையில் களைப்பாய் படுத்திருந்த குரு மூர்த்தி அவரைப் பார்த்ததும் எழ முயன்றார்.

"சார், நீங்க படுத்திருங்க. இவர் எல்லா விபரமும் சொன்னாரு. கவலைப்படாதீங்க. மறுபடி அவன் வர மாட்டான். உங்களுக்கு முழு பாதுகாப்பு நான் ஏற்பாடு பண்றேன்."

"ஐ ம் ஆல் ரைட்" என்று எழுந்து அமர்ந்து கொண்டவர், "நீங்கதானே போன்ல பேசினது? நான் அலட்சியமா பேசிட்டேன். நீங்க சந்தேகப்பட்ட மாதிரி என்னைத்தான் குறி வெச்சி வந்திருக்கான். இந்த மாதிரி வெறி பிடிச்ச பசங்களுக்கு உருட்டுக் கட்டை, கத்தின்னா தைரியமா மோதுவானுங்க. துப்பாக்கின்னா பயந்துடுவானுங்க. அவன் போனதும்தான் படபடப்பு அதிகமாயிடுச்சு. விஸ்வம் ரொம்ப சின்சியர். அவனைப் போட்டு மண்டையில அடிச்சுட்டுப் போயிட்டான். வீட்டுக்குப் போடான்னா கேக்காம என் பக்கத்திலேயே உக்காந்திருக்கான். ஹி நீட்ஸ் ரெஸ்ட். ரத்தம் போயிருக்கு. நீங்க அவனைப் போகச் சொல்லுங்க இன்ஸ் பெக்டர்."

"விஸ்வம், நீ போப்பா. நான்தான் வந்துட்டேனே. உங்கய்யாவை பத்திரமா பார்த்துக்கறேன். வீட்டைச் சுத்தி போலீஸ் நிறுத்திடுவேன் இன்னும் பத்து நிமிஷத்தில, ஒரு நர்சையும், டாக்டரையும் பக்கத்திலேயே போட்டுடறேன். என்னதான் கட்டு போட்டுட்டாலும் உனக்கு ரெஸ்ட் வேணும். நீ போ. நான் பார்த்துக்கறேன்"



விஸ்வம் இரண்டு முறை மறுத்து, பிறகு வற்புறுத்தியதும் போனான்.

இன்ஸ்பெக்டர் நியூட்டன் போன் செய்ய எழுந்தபோது...

"இன்ஸ்பெக்டர், ஒரு நிமிஷம்" என்றார் குருமூர்த்தி.

"என்ன சார்?"

"அநாவசியமா என்னால அரசாங்கத்துக்கு செலவு கூடாதுப்பா. அவனைப் பிடிக்க எத்தனை நாளாகும்?"

"எத்தனை நாளா? முழுக்க வலை விரிச்சி வெச்சிருக்கேன். நாளைக்குள்ளே பிடிச்சிடு வேன்"

"ஒரு நாளைக்காக எதுக்கு ஆர்ப்பாட்டம்? அந்த வெற்றிச் செல்வனுக்கு நல்ல பாதுகாப்பு ஏற்பாடு பண்ணியிருக்கிங்களா?"

"ஆமாம் சார்"

"பின்னே, அந்த வீட்லேயே என்னையும் கொண்டு போய் வெச்சுட்டா ஒரே ஏற்பாட்டிலே ரெண்ட பேருக்கும் பாதுகாப்பு கிடைச்சிட்டுப் போகுது. எதுககு தனித்தனியா போலீஸ் போர்சையும் காசையும் வேஸ்ட் பண்ணணும். இந்த வீட்ல யார் இருக்கா? நான் ஒண்டிக்கடைதானே?"

"நீங்க சொல்றது நியாயம்தான் சார். உங்களுக்கு இப்ப என்னோட வர்றதில எந்த

சிரமமும் இல்லைன்னா உங்களை அந்த வீட்டுக்கு அழைச்சுட்டுப் போறேன். நீங்க சொல்ற மாதிரி அது ரொம்ப ஸேஃப்தான்."

"என்னை என்ன நோயாளின்னு நினைச்சிங்களா இன்ஸ் பெக்டர்? வயசுதான் அறுபத்தஞ்சி. ஐ ஃபீல் யங். என்ன, ஒரு ஹார்ட் அட்ராக் வந்து பயமுறுத்திட்டதால பயந்து பயந்து நடக்க வேண்டியிருக்கு" என்ற எழுந்து கொண்டவர், "ஐ ம் ரெடி" என்றார்.

அந்த வீட்டைப் பூட்டிக் கொண்டு அவரை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு நியூட்டன் வெற்றிச்செல்வனின் வீட்டிற்கு வந்தார்.

இன்ஸ்பெக்டர் மார்ட்டினை ஜட்ஜுக்கு அறிமுகப்படுத்தி வைத்து விட்டு அங்கே நடந்த சம்பவங்களை விளக்கினார் நியூட்டன்.

"உங்க பேர் வெற்றிச்செல்வன் இல்லையே... இஃப் மை மெமரி ஈஸ் ரைட், நீங்க மதியழகனோ இல்லை மாரியப்பனோ... கரெக்ட்?" என்றார் குருமூர்த்தி வெற்றிச்செல்வனிடம்.

"கரெக்ட்தான் சார். என் பேர் மதியழகன்தான் கேஸ் நடந்த சமயத்தில, அப்புறம் கௌட்லயே மாத்திக்கிட்டேன்"

"இன்ஸ்பெக்டர், தர்மராஜ் இவருக்கு போன் செஞ்சப்போ என்னைக்கு இவரைக் கொல்லப் போறதா சொன்னான்?" என்றார் குருமூர்த்தி.

"இன்னைக்குள்ளேதான் சார்" என்றார் நியூட்டன்.

"மணி என்ன இப்போ?"

நியூட்டன் தன் வாட்சில் பார்த்து, "பதினொன்னு ஐம்பத்தி ஒம்போது" என்றார்.



"ஸோ, இன்னைக்குன்ற கணக்கு முடிய இன்னும் ஒரு நிமிஷம் இருக்கு. அது போதாதா என்ன?" என்று குருமூர்த்தி சட்டென்று தன் இடுப்பில் செருவி வைத்திருந்த ரிவால்வரை எடுத்து ஒரு விநாடியின் பின்னத்தில் வெற்றிச் செல்வனை இதயம் குறி பார்த்து சுட்டார்.

குறி தவறவில்லை.

ரத்தம் சிதறியடிக்க... அலறிச் சாய்ந்தடங்கினான் வெற்றிச் செல்வன். அதிர்ந்து போய் நின்றார்கள் இன்ஸ்பெக்டர் நியூட்டனும், மார்ட்டினும்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு காவலுக்கு இருந்த அத்தனைப் போலீஸ்காரர்களும் தபதபவென்று ஓடி வரத் துவங்கினார்கள்.

கையில் உறுதியாக ரிவால்வரைப் பிடித்திருந்த ஜட்ஜ் குருமூர்த்தி நியூட்டன் பக்கம் திரும்பி, "இன்னைக்கு இவனுக்கு கடைசி தேதின்னு சொன்னேன். செஞ்சிட்டேன். யெஸ், இவனுக்கு தர்மராஜ் பேசறமாதிரி குரல் மாத்திப் பேசினது நான்தான். சூர்யா சந்தரை திட்டம் போட்டுக் கொலை செஞ்சது நான்தான். கொஞ்சம் முன்னால உங்ககிட்டே என்னோட சின்சியர் வேலைக்காரன் விஸ்வத்தோட ஒரு பெரிய நாடகம் ஆடினது நான் உங்க பாதுகாப்பு வளையத்தை மீறி இவனைச் சுடறதுக்கு இந்த சந்தர்ப்பம் ஏற்படுத்தத்தான்" என்றார்.

"ஏ... ஏன் சார் இதெல்லாம்?" என்றார் உறைந்து போன அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத நியூட்டன்

“என் குடும்பமே நாசமாப் போச்சு. ஏன்? இவனுங்கதான் என்னை அசுத்தப் படுத்தினானுங்க. எனக்கு மூணு பொண்ணுங்க. ஒருத்திக்கு டாக்டர் சீட்டுக்கும், ஒருத்திக்கு என்ஜினியரிங் சீட்டுக்கும் முயற்சி பண்ணிட்டிருந்தேன். எப்போ? பத்து வருஷம் முன்னாடி! ஜட்ஜ் பிள்ளைங்களா இருந்தாலும் மார்க் கம்மியா வாங்கி யிருந்ததால அட்மிஷனுக்கு லட்சக் கணக்குல பணம் கேட்டாங்க. விட்ல நான் ஸ்ட்ரிக்கட்டான ஆசாமி. லஞ்சம் வாங்கினதும் இல்லை, கொடுத்ததும் இல்லை. வீட்ல பொண்ணுங்க எப்பப் பார்த்தாலும் சீட் கிடைக்கலையேன்னு அழுதிட்டிருந்தாங்க. அப்பதான் இவனுங்களோட கேஸ் வந்தது. திலகாவை கற்பழிக்க முயற்சி செஞ்சி அவ சாவுக்குக் காரணமா இருந்ததா பிராசிகியூஷன் கேஸ் போட்டது. ஆதாரங்கள் எல்லாம் இந்த ரெண்டு பேருக்கும் எதிரா இருந்தது. ரெண்டு பேருக்கும் சுலபமா ஏழு, ஏழு வருஷம் கொடுத்திருக்க வேண்டியது. அந்த சூழ்நிலையில் ரெண்டு பேரும் வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்தாங்க. ‘வக்கீல் ராஜாராம் பத்து லட்சம் வாங்கிக்கிட்டு திறமையா வாதம் பண்றதுக்கு சம்மதிச்சிருக்காரு. சட்டப் பிரச்சனைகளை அவர் சரி செஞ்சிடுவாரு. நீங்க அதிகமா கிளறாம எங்களை விடுதலை செஞ்சிட்டா உங்களுக்கு தனியா பத்து லட்சம் தர்றோம்’னு சொன்னாங்க. நான் அசந்து போய்ட்டேன். பத்து லட்சமான்னு மலைச்சிப் போய்ட்டேன். என் வீட்ல அப்போ பொண்ணுங்க அட்மிஷனுக்காக பணத்தேவை இருந்ததால முதல் தடவைய என் மனசாட்சியைக் கழட்டி வெச்சிட்டு கை நீட்டி பத்து



லட்சம் லஞ்சம் வாங்கினேன். நீதி தேவதையை மிதிச்சிட்டு தீர்ப்பை மாத்தி எழுதினேன். என்ன ஆச்சு? அடுத்த மாசமே என் பொண்டாட்டிக்கு பராலிசிஸ் அட்டாக் பண்ணி படுக்கையில விழுந்தா. எம்.பி.பி.எஸ் சீட் கிடைச்சும் காலேஜ்ல நடந்த ரேகிங் கொடுமை தாங்காம பெரிய பொண்ணு தற்கொலை பண்ணிக்கிட்டா. அடுத்தவ காலேஜ் டூர் போறப்ப ஏரியில தவறி விழுந்து செத்தா. கடைசி பொண்ணு என் கண் முன்னாடி நடுரோட்டுல பல்லவன் பஸ் சக்கரத்துல கூழானா. ஏன்? அழகா இருந்த என் குடும்பம் சின்னாபின்னமானது ஏன்? நான் வாங்கின லஞ்சம்! நான் நீதி தவறினதுக்காக தண்டனை! நீதிபதியா நான் கொடுக்கத் தவறின தண்டனையை இவங்களுக்குக் கொடுத்தே ஆகணும்னு எனக்குள்ளே ஒரு நெருப்பு! அப்பதான் நீதி தேவதைக்கு கொஞ்சமாச்சும் என் நேர்மையைக் காட்டினதா இருக்கும்னு நினைச்சேன். லஞ்சம் வாங்கின என் குடும்பம் நாசமாப் போச்சு, திலகா செத்தா. திலகா அண்ணன் ஜெயிலுககுப் போனான் பத்து வருஷ தண்டனையில, ஆனா இதுக்கெல்லாம் காரணமா இருந்தவனுங்கள்ல ஒருத்தன் பெரிய சினிமா ஸ்டார்! ஒருத்தன் பெரிய தொழிலதிபர்! என்னய்யா நியாயம் இது! லஞ்சம் கொடுத்தவனுக்கு, ஒரு கன்னிப் பெண்ணோட சாவுக்கு காரணமா இருந்தவனுக்கு. நீதியை விலைக்கு வாங்கினவனுக்கு தண்டனை கிடையாதா? நான் நொந்துட்டேன். என் கோபமெல்லாம் பொங்கும். அடங்கும். தீவிரம் காட்டாது. அப்பதான் வக்கீல் பார்த்திபன் என்னைப் பார்க்க வந்தார். அவர் அடிக்கடி என்னை வந்து பார்த்துட்டுப்

போவார். ஜெயில்லேர்ந்து ரிலீசாகி வந்த தர்மராஜ் தன் வீட்டை அனாதை இல்லத்துக்கு உயிலெழுதி வெச்சிட்டு சாமியா ராகப் போறேன்னு சொல்லி வடக்கேப் பயணப்பட்டான்னு அவர் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியானேன். விடுதலையாகி வந்த தர்மராஜுக்கு பழி வெறி இருக்கும். அவன் இவனுங்களை பழி வாங்குவான்னு நான் நினைச்சிட்டிருந்தேன். ஆனா அவன் சாமியாறாகறேன்னு போய்ட்டதால என் கோபம் அதிகமாயிடுச்சு. நானே களத்தில் இறங்கிட்டேன். தர்மராஜ் பேர்ல பிளான் செஞ்சி ரெண்டு பேரையும் தீர்த்துட்டேன். இப்பதான் நீதிதேவதையை என்னால தலை நிமிர்ந்து பார்க்க முடியுது. நான் கொலைகாரன் பட்டம் சுமக்கப் போறதுக்காக கவலைப்படலை. வாழ்க்கையில எல்லாம் இழந்துட்டேன். மிச்சம் இருந்தது கௌரவம் - மட்டும் தான். அதுவும் போய்ட்டுப் போகுது. எல்லா பத்திரிகையிலயும் இந்த கேசைப் பத்தி விபரமா எழுதச் சொல்லுங்க, லஞ்சம் வாங்கற துக்கு முன்னாடி அட்லீஸ்ட் ஒரு செகண்ட் யோசிக்க மாட்டானா? அது போதும்" என்று சிரித்த நீதிபதி, "கமான், அரெஸ்ட் மி" என்றார்.

## முற்றும்

பின் குறிப்பு: இந்தக் கதைக்கும் தலைப்பிற்கும் ஏதாவது ஒரு சம்பந்தம் இருப்பதாக நிரூபிப்ப வர்களுக்கு, யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாள ராக்க சிபாரிசு செய்கிறேன்.

-பட்டுக்கோட்டை பிரபாகர்.



# காதலே சரணம்

உள்ளங்கையில் மணலை நிரப்பி மவுனமாய் அப்படியே அருகில் சிறு குவியல் மீது கொட்டி ஸ்யாமின் மனம் எண்ணக் கொண்டது. பத்தாவது கைப்பிடி அளந்து அளந்து ஒரு பக்கம் மேடாகிவிட இன்னொரு பக்கம் பள்ளமாகி விட்டிருந்தது. எதிரே நீலப்பட்டு நிறத்தில் பரந்து விரிந்து கிடந்த கடல் பரப்பு மாலைக் கதிரவன் ஒளியின் பிரதிபலிப்பில் மின்னியது. ஒன்றையொன்று விரட்டிய வண்ணம் அளவிலா அலைகள்... ஸ்யாம் அருகில் நெருக்கமாய் உட்கார்ந்து லதா முழங்கால் மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு மண்ணைத் துழாவி எதையோ தேடுவது போல ஒரு பாவனையை முகத்தில் படரவிட்டிருந்தாள். அவளது தேடலுக்கு